**கவனிக்க** .–21.03.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1856 - 2014 මාර්තු මස 28 වැනි සිකුරාදා - 2014.03.28

1856 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 372 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 382 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பம் கோரல் - 2014

*இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிகளில் நிலவுகின்ற 10 வெற்றிடங்களக்கு தகுதியானவர்களை தெரிவு செய்வதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம், இலக்கம் 36, மலல சேகர மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவி" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.*

*(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2014.05.01 ஆகும்.*

***குறிப்பு.***- *விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் காணாமல் போதல் அல்லது தபாலில் ஏற்படும் தாமதம் பற்றி முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்திலெடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்தப்படுவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.*

*1. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை.*** *- கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சையொன்றின் பின்னர் தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை ஒழுங்கில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.*

*நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்க தீர்மானிக்கப்படும்.*

*2. **சேவையிலமர்த்துவதற்கான நிபந்தனைகள்.*** *- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/அநாதைகள், தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு நிதியைச் செலுத்துதல் வேண்டும்.*

(ii) *இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று ஆண்டு தகுதிகூர் நிலை காலத்திற்கு உட்படுத்தப்படுவதோடு அம்மூன்றாண்டு காலத்தினுள் முதலாம் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். (தற்போது அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் ஒருவருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்படுத்தப்பட்டு நியமிக்கப்படுவார்.*

(iii) *அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 07/2007 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றுநிருபங்களுக்கு அமைய நியமனத் திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அரசகரும மொழி அல்லாத மொழி ஒன்றின் மூலம் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர்கள் 03 ஆண்டுகளுக்குள் ஒரு அரச கரும மொழியில் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்பதோடு மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை 06 ஆண்டுகளுக்குள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.*

(iv) *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரச நிதி பிரமாணங்களுக்கும் ஏனைய திணைக்கள கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டிருக்கும்.*

*3. **சம்பள அளவுத்திட்டம்*** *.- இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 28,095 - 5 x 645 - 5 x 750 - ரூபா 35,270 (சம்பள குறியீடு SL5 - 2006)*

**4. தேவையான தகைமைகள்:-**

(i) ***கல்வி/தொழில் தகைமைகள்.*** *-உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக இருத்தல்/பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் சட்டம் சம்பந்தமான பட்டத்தைப் பெற்றிருத்தல்.*

(ii) ***சேவை அனுபவம்.-***
*உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத செயலூக்கமிக்க சேவைக் காலத்தை கொண்ட தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*5. **வயதெல்லை.*** *-2014.05.01 ஆந் திகதிக்கு 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (தற்போது அரச/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு அதிகூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.)*

*6.* ***உடற்தகைமை.***- (i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும்;

(ii) பதவியில் சேவையாற்றுவதற்கு தேவையான உடல் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. ***வேறு தகைமைகள்.***-(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பதவியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருப்பதோடு விண்ணப்பம் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் திகதியன்று குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் எல்லாவிதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

*8.* ***நேர்முகப் பரீட்சை.***- கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சை

8.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும்.

8.2 நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் முறை பற்றிய விரிவான விபரம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | ***மேலதிக கல்வித் தகைமைகள் :*** | | 10 |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுள்ள சட்டம் தொடர்பான பட்டம் | | |
| | - முதலாம் வகுப்புச் சித்திக்கு | 10 | |
| | - இரண்டாம் வகுப்பு மேல் சித்திக்கு | 08 | |
| | - இரண்டாம் வகுப்பு கீழ் சித்திக்கு | 06 | |
| | சட்டக்கல்லூரி இறுதியாண்டின் முதலாம் வகுப்புச் சித்திக்கு | 08 | |
| | சட்டக்கல்லூரி இறுதியாண்டின் இரண்டாம் வகுப்பு கீழ் சித்திக்கு | 06 | |
| | (உச்ச தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். பல்கலைக்கழகப் பட்டம் அல்லது சட்டக் கல்லூரித் தகைமைகள் என்பவற்றில் ஒன்றுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 2. | ***மேலதிக தொழில் தகைமைகள் :***<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் ஏற்புடையதுறை தொடர்பான ஓராண்டிற்குக் குறையாத சட்டப் பின்படிப்பு அல்லது சட்டப் பின்படிப்பு டிப்ளோமா சான்றிதழ் ஒன்றிற்கு (ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 05 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் ஏற்புடைய துறை தொடர்பாக 6 மாதத்திற்குக் குறையாத டிப்ளோமா சான்றிதழ் ஒன்றிற்கு<br>(ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 3 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் ஏற்புடைய துறை தொடர்பாக 03 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி ஒன்றிற்கு<br>(ஒரு பாட நெறிக்கு 2 புள்ளிகள் வீதம்) | | 10 |
| 3. | ***சட்டத்துறை பற்றிய அனுபவம் :***<br>அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக் கொள்ள சட்டத்தரணியாக சேவையாற்றிய 03 ஆண்டுகளைத் தவிர சட்டத்தரணியாக சேவையாற்றிய அனுபவம்.<br>(ஓராண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் உச்சமாக 10 புள்ளிகள்வழங்கப்படும்.) | 10 | 40 |
| | (20 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்தைக் கொண்டிருக்கும் சட்டத்தரணி அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிமன்ற அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) | | |

| தொடர் இலக்கம் | விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| | **நீதி மன்றத்தில் வழக்குகள் கையாளுதல் சம்பந்தமான அனுபவம்** | 10 | |
| | ஓராண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் உச்சமாக 10 புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| | (20 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்தைக் கொண்டிருக்கும் சட்டத்தரணி அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிமன்ற அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) | | |
| | **சட்ட உத்தியோகத்தராக சட்ட மா அதிபர் திணைக்களம் தவிர்ந்த வேறு அரச நிறுவனத்தில் சேவையாற்றிய தொழில் அனுபவம்.** | 10 | |
| | ஓராண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் உச்சமாக 10 புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| | (திணைக்களத் தலைவரினால் அல்லது திணைக்களத்தில் உள்ள தலைமை சட்ட உத்தியோகத்தரினால் தொழில் அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) | | |
| | **சட்டமா அதிபருக்காக வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் மன்றில் ஆஜராகுதல் சம்பந்தமாக பெற்றுக் கொண்ட தொழில் அனுபவம்.** | 10 | |
| | ஓராண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் உச்சமாக 10 புள்ளிகள் வழங்கப்படும் | | |
| | (சட்டமா அதிபர் அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவரினால் தொழில் அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) | | |
| 4. | ***கணினித் தேர்ச்சி :*** | | 10 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப் படிப்பு ஒன்றிற்காக தகவல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கற்றிருத்தல். | 10 | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றில் 06 மாதத்திற்குக் குறையாத காலப் பகுதியைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாட நெறிக்காக | 07 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக 03 மாதங்களுக்கு குறையாத காலப் பகுதியைக் கொண்ட சான்றிதழ் பாட நெறி ஒன்றிற்கு | 05 | |
| 5. | **ஆங்கில மொழி தேர்ச்சி:** | | 10 |
| | ஆங்கில மொழியில் பட்டம், பட்டப்பின்படிப்பு பட்டம், எல்எல்பி அல்லது எல்எல்பி பட்டப் பின்படிப்பு | 10 | |
| | (பரீட்சைக்குரிய எல்லா வினாப்பத்திரங்களையும் ஆங்கில மொழி மூலம் விடையளித்திருந்திருத்தல் வேண்டும்.) | | |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி | 07 | |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி | 05 | |

| தொடர் இலக்கம் | விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 6. | தீர்மானிக்கப்பட்ட வழக்குகள், கட்டளைச் சட்டங்கள், சட்டங்களின் அறிவை பரீட்சிக்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் வழக்கு கற்றல்கள் பற்றிய கேள்விகளை சமர்ப்பித்தல் (உரிய வினாக்கள் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் தயாரிக்கப்படல் வேண்டும்). | | 15 |
| 7. | நேர்முகப் பரீட்சை செயற்பாடு: | | 05 |
| | **மொத்தம்** | | 100 |

9. (I) விண்ணப்பப்படிவங்கள் மாதிரி விண்ணப்பப்படிவங்களிற்கமைய 22 X 29 செ. மீ. அளவிலான 4 தாளில் 1 முதல் 9 வரையான விடயங்கள் முதல் பக்கத்தில் அமையும் விதத்தில் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரி தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையா விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படா விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றை விண்ணப்பதாரி தன்னுடன் வைத்திருத்தல் பொருத்தமானது. விண்ணப்பப்படிவங்கள் அரசாங்க வர்த்தமானியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்துள்ளதாக என பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திரா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

II. *விண்ணப்பதாரியின் ஆளடையாளம்* : அறிவிக்கப்படுகின்றபோது விண்ணப்பதாரிகள் பின்வரும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

1. கல்விச் சான்றிதழ்கள் ;
2. பிறப்புச் சான்றிதழ்;
3. தேசிய ஆள் அடையாள அட்டை;
4. அனுபவம் பற்றிய சான்றிதழ் (நீதிமன்ற உத்தியோகத்தர் அல்லது ஆகக் குறைந்தது 20 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவமுடைய சட்டத்தரணி ஒருவரினால் வழங்கப்படும் சான்றிதழ்களினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)
5. நடத்தை பற்றிய சான்றிதழ்கள் இரண்டு: (இதில் ஒன்று பிரதேச செயலாளரினால் மேல் ஒப்பமிடப்பட்டு கிராம அலுவலரினால் வழங்கப்படும் சான்றிதழாக இருத்தல் வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை:-**

(அ) விண்ணப்பப்படிவத்துடன் எதுவித சான்றிதழ்களோ அதன் பிரதிகளோ இணைத்தனுப்புதல் ஆகாது.
(ஆ) கோரப்படுகின்ற போது ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் தொழில் புரியும் திணைக்கள/ நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரியின் ஒப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபரினால்/சமாதான நீதவான் ஒருவரினால் /சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/சட்டத்தரணி ஒருவரினால் /பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஒருவரினால்/ முப்படைகளில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது ரூபா 22,935 ஐ மாதாந்த ஒன்றிணைந்த வேதனமாகப் பெறும் நிரந்தர அரசாங்க பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

10. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள், குறிப்பிட்ட சேவைக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுடனான நிபந்தனைகள் இப் பதவிக்கு ஏற்புடையனவாகும்.

11. வெற்றிடங்களை நிரப்புவது, நிரப்பாமல் விடுவது அல்லது வெற்றிடங்களில் ஒரு பகுதியை மட்டும் நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புகளுக்கமைய,

லக்ஷ்மி ஜயவிக்ரம,
பணிப்பாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2014, பங்குனி 05.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**

உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவி

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :-----.
   (ii) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) :-----.
2. (i) முகவரி :-----.
   தனிப்பட்ட முகவரி :-----.
   (ii) அலுவலக முகவரி (அரச சேவையாளர் எனில்) :-----.
3. (i) பிறந்த திகதி :-
   ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
   (ii) 2014.05.01 ஆந் திகதியன்று வயது :-
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |
5. தேசிய இனம் :-----.
6. பால் : ஆண்/பெண் | |
7. (i) கல்வித்தகைமைகள் :-----.
   (ii) தொழில் தகைமைகள் :-----.
   (iii) 2014.05.01 ஆந் திகதிக்கு தொழில் அனுபவம் :-----.

   வருடங்கள் : | | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

8. அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவரா? அல்லது பதவி வறிதாக்கப்பட்டவராக கருதப்பட்டவரா? என்பது பற்றிய விபரம் :-
9. (i) ஏதும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா? :-----.
   (ii) ஆமெனில், அது பற்றிய விபரம் :-----.

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் சான்று பகர்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மையற்றது அல்லது பிழையானது என என்னைத் தெரிவு செய்வதற்கு முன்பு தெரியவருமாயின் நான் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் என்பதையும் நியமனத்தின்பின் தெரியவருமாயின் இழப்பீடு ஏதுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

..........................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

விண்ணப்பதாரர் அரச சேவையைச் சேர்ந்தவராயின் -

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:**

திரு./ திருமதி/ செல்வி ................. இத்திணைக்களத்தில் சேவையாற்றுகிறார். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

....................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம் :-----.
(பதவி முத்திரையுடன்)
திகதி :-----.

3-691

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மார்ச்சு 12.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | திரப்பனை | நாச்சதூவ பிரதேசத்தின் ஹுருலு பலாத பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம். |

3-916

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

நீதி அமைச்சின் மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்

நீதி அமைச்சில் வெற்றிடமாகவுள்ள மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா.த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்

அல்லது

க.பொ.த. (உ.த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழியில் சித்தியடைந்திருத்தல்.

தொழிற்றகைமைகள் : மொழிபெயர்ப்பாளர் சேவையின் விசேட வகுப்பின் அலுவலர் ஒருவராக இருத்தல்

அல்லது

மொழிபெயர்ப்பாளர் சேவையில் I ஆம் வகுப்பின் அலுவலர் ஒருவராக இருத்தல் மற்றும் அச்சேவையின் 08 வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

3. **பிற தகைமைகள்** . - (1) பரீட்சார்த்தி சிறந்த நல்லொழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்;

(2) உடற்தகைமைகள் : எல்லா பரீட்சார்த்திகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும்.

4. **சம்பள அளவுத் திட்டம்** : MN - 7- 2006 - A மாதமொன்றுக்கு ரூபா 20,030 - 11 x 365 - 18 x 500 - ரூபா 33,045

5. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.-அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படுகின்ற அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (அ) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள், அநாதைகள், தபுதாரர்கள், ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் அரச கரும மொழிக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தும் பொருட்டு தற்போதுள்ளதும் இதற்குப் பின்னர் விதிக்கப்படுகன்றதுமான சட்டதிட்டங்கள் மற்றும் சட்டவாக்கங்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். அதேபோல் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருக்கும் மற்றும் வழங்கப்படுகின்ற கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2014.04.28 ஆகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன்அரசாங்க வைத்திய பரிசோதனையொன்றில் சித்தி பெறுதல் வேண்டும்.

7. இவ்வறிவித்தலின் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக A4 அளவிலான கடதாசியில் தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவர்களினூடாக 2014.04.28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ பதிவுத் தபால் மூலம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் - "நீதி அமைச்சின் மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. **நேர்முகப்பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படுகின்ற முறை**.-

| | புள்ளிகள் வழங்கப்படும் முறை | அதிகூடிய புள்ளிகள் | |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | |
| | * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டத்துறை சம்பந்தப்பட்ட | 20 புள்ளிகள் | |
| | பட்டமொன்றைப் பெற்றிருத்தல் | 20 புள்ளிகள் | |
| | * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டத்துறை சம்பந்தப்பட்ட பட்டப் பின்படிப்பு டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் | 15 புள்ளிகள் | |
| | * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டத்துறை சம்பந்தப்பட்ட டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்; | 05 புள்ளிகள் | |
| | * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நிறுவனமொன்றில் சட்டத்துறை சம்பந்தப்பட்ட சான்றிதழ் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்; | 03 புள்ளிகள் | |
| | (அதிகூடிய 20 புள்ளிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும்). | | |

| | புள்ளிகள் வழங்கப்படும் முறை | அதிகூடிய புள்ளிகள் | |
|---|---|---|---|
| 02. | ***மொழித் தேர்ச்சி :*** | | 25 புள்ளிகள் |
| | * பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பெறப்பட்ட பட்டத்தில்/இலங்கைச் சட்டக்கல்லூரிப் பரீட்சையில் பிரதான பாடமாக சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழியைக் கற்றிருத்தல் (அடிப்படைத் தகைமையாக கவனிக்கப்பட்ட பட்டம் இங்கே மீளக் கவனிக்கப்படுதலாகாது) | 25 புள்ளிகள் | |
| | * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி பற்றிய ஓராண்டுக்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் | 15 புள்ளிகள் | |
| | * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி பற்றிய 6 மாதத்திற்குக் குறையாத சான்றிதழ் நெறியொன்றைக் கற்றிருத்தல். | 10 புள்ளிகள் | |
| 03. | ***மேலதிக தகைமைகள் :*** | | 30 புள்ளிகள் |
| | (1) மொழிபெயர்ப்பாளர் சேவை<br>* மொழிபெயர்ப்பாளர் சேவையின் விசேட தரத்தின் அனுபவம் | அதிகூடிய புள்ளிகள் 20 | |
| | * மொழிபெயர்ப்பாளர் சேவையின் 1 ஆம் வகுப்பின் அனுபவம். (இவ்வறிவித்தலின் தொழிற்றகைமைகளின் கீழ் அடிப்படைத் தகைமைகளைக் காட்டப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவையின் 8 வருட கால அனுபவத்திற்கு மேலதிகமாக (ஒவ்வொரு ஆண்டுக்காகவும் 02 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 20 வழங்கப்படும்) | | |
| | (ii) நீதிமன்றத்துறையின் மொழிபெயர்ப்பாளர் சேவை<br>* நீதிமன்றத்துறையின் மொழிபெயர்ப்பாளர் சேவையின் அனுபவம் (ஒவ்வொரு ஆண்டுக்கும் 02 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்) | அதிகூடிய புள்ளிகள் 10 | |
| 4. | ***மேலதிக தகைமைகள் - கணினி எழுத்தறிவு :*** | | 20 புள்ளிகள் |
| | * அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில் நுட்பம் பற்றிய 6 மாதத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைக் கற்றிருத்தல்.<br>(ஒவ்வொரு சான்றிதழ் கற்கை நெறிக்காகவும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்) | | |
| | * அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில் நுட்பம் பற்றிய 03 மாதத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைக் கற்றிருத்தல். (ஒவ்வொரு சான்றிதழ் கற்கை நெறிக்காகவும் 05 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்) | | |
| 5. | நேர்முகப் பரீட்சையில் காட்டப்பட்ட திறமை | | 5 புள்ளிகள் |

9. சரியாகப் பூர்த்தி செய்யப்படாததும் அடிப்படைத் தகைமைகள் இல்லாததும் மற்றும் குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறுகின்றதுமான விண்ணப்பங்கள் எவ்வித முன் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுமென்பதுடன், விண்ணப்பங்கள் அல்லது அது தொடர்புடைய எந்தவொரு ஆவணமும் தபாலில் காணாமற் போனது தொடர்பாக செய்யப்படுகின்ற எந்தவொரு முறைப்பாடும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

10. எவரேனும் விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தின் ஏதேனும் பொய்யான தகவலொன்று இருப்பதன் காரணமாக அவர் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவார்.

இதில் குறிப்பிடப்படாத ஒருவிடயம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராவார்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கமலினி த சில்வா,
நீதி அமைச்சின் செயலாளர்.

நீதி அமைச்சு,
"மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி",
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**நீதி அமைச்சு**

***மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்***

இலக்கம் : ..........
(அலுவலக உபயோகத்துக்காக)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
3. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
4. தொலைபேசி இலக்கம் :-----.
5. தேசிய அடையாள அட்டை இல. :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. ஆணா/பெண்ணா என்பது :-----.
7. பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
8. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :-----.
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
9. தேசிய இனம் :-----.
10. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :-----.
11. கல்வித் தகைமைகள் :-
க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை :
ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

க.பொ.த. (உயர் தரம்) பரீட்சை :
ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |

பட்டம் பற்றி விபரம் :-----.
பட்டம் :-----.
பல்கலைக்கழகம் :-----.
பட்டம் வழங்கப்பட்ட திகதி :-----.
மொழிமூலம் :-----.

12. தொழிற்றகைமைகள் :
மொழிபெயர்ப்புச் சேவையின் 1 ஆம் வகுப்புக்கு/விசேட வகுப்புக்கு நியமனம் பெற்ற திகதி :-----.
அனுபவம் :-----. வருடங்கள் :-----.
நீதிமன்றத் துறையில் மொழிபெயர்ப்பாளர் ஒருவராக சேவை அனுபவம் .............. வருடங்கள்

13. பிற கல்வித் தகைமைகள் :-----.
i. :-----.
ii. :-----.
iii. :-----.

14. மொழித் தேர்ச்சி : (சம்பந்தப்பட்ட கூட்டினுள் "✓" அடையாளத்தை இடுக.)

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | மிகக் குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் சான்றிதழ்:**

.............................................. ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என்றும் உண்மையானவை என்றும், தெரிவித்துக் கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டோ, வினைத் திறமையின்மையின் மேல் சேவையிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்பட்டோ இல்லையெனவும் பதவியை விட்டுச் சென்ற ஒருவராக கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் அடங்கியுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருடமிடத்து நான் தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்றும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரிவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

.................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி .............. தற்போது இவ்வமைச்சில்/திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர் சேவையில் விசேட வகுப்பின் அலுவலர் ஒருவராக சேவை செய்கின்றார் எனவும் இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

.................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

பெயர் :-----.
பதவி :-----.
அமைச்சு/திணைக்களம் :-----.

3-937

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மார்ச்சு 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | ஹெவ்லொக் டவுன், கிருலப்பனை, நாராஹேன்பிட்டி, திம்பிரிகஸ்யாய, பொரளை மற்றும் வெள்ளவத்தை பிரதேசத்தினுள் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) மூலம் | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கொழும்பு. |

3-1025

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் வகுப்பு III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சிங்கள மொழிமூல சுருக்கெழுத்தாளர் வகுப்பு III பதவிக்கான 03 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற எழுத்து மற்றும் தொழில் தகைமை பரீட்சையின் பெறுபேறுகளின்படி தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு தகுதி ஒழுங்கினடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

03. **வேதன அளவுத் திட்டம்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006(IV) இன்படி MN-1-2006 (அ) ரூபா 13,120-10 x 145 - 11 x 170 -10 x 240-10 x 320 - ரூபா 22,040 ஆகும்.

நான்காவது படிநிலைக்கு முன்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சை.

04. **சேவை நியதிகள்:-**

4.1 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும் என்பதுடன் , விதவைகள் /அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தலும் வேண்டும். இந்தப் பதவி மூன்று வருட (03) தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைவான தாகும்.

4.2 2007.05.28 ஆம் திகதிய 7/2007 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை நியதிகளின்படி சேவையில் ஈடுபட்டு 5 வருட காலப்பகுதிக்குள் சேவையில் ஈடுபடுகின்ற மொழி தவிர்ந்த ஏனைய அலுவலக மொழி/மொழிகளில் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.3 கொழும்பு 04, லோறிஸ் வீதி, 128 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள வேலையாளர் நட்டஈடு ஆணையாளர் அலுவலகத்திலும், நாடளாவிய ரீதியிலான நடமாடும் வேலையாளர் நட்டஈடு நீதிமன்றங்களிலும் நீங்கள் தொழில் புரிதல் வேண்டும்.

5. **தகைமைகள்:**

5.1 விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;
5.2 விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் தினத்தன்று 18 வயதினையடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் 30 வயதிற்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.
5.3 நன்னடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும்.
5.4 கல்வித் தகைமை:-

(i) முதல் தொழி (சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்) மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் ஏதேனும் பாடங்களில் இரண்டு (2) திறமைச் சித்தியுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையை சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ii) க.பொ.த. உயர் தரத்தில் ஆகக் குறைந்தது ஒரு பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.5 தொழில்சார் தகைமைகள்.- உயர் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகாரிக்கப்பட்ட நிறுவக மொன்றினால் நடாத்தப்பட்ட சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டெழுத்து (6 மாத) சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த. (சா.த) பரீட்சையில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பாடத்தில் திறமைச் சித்தி (சி) பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- உயர் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகாரிக்கப்பட்ட சுருக்கெழுத்து மற்றும் கணினி தட்டெழுத்திற்கான நிறுவனங்கள் பின்வருமாறு :-

* தொழில்நுட்ப கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் வருகின்ற தொழிற்றுறை கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகள்
* பயிற்சி அதிகார சபையின் தேசிய பயிலுனர் நிறுவகத்தின் கீழ் வருகின்ற பயிற்சி நிலையங்கள்
* இலங்கை வாழ்க்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் வருகின்ற பயிற்சி நிலையங்கள்
* தேசிய இளைஞர் சபையின் கீழ் வருகின்ற பயிற்சி நிலையங்கள்.

6. **பரீட்சை நடைமுறை**.- ஆட்சேர்ப்பிப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது, எழுத்துப் பரீட்சை மறறும் தொழில்சார் பரீட்சையினை கொண்டிருக்கின்றது. முதலில், எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும் என்பதுடன், இந்த வினாத்தாளில் 40% இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளே தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை:

| வினாத்தாள் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|
| பொது அறிவு மற்றும் கட்டுரை | 100 | 01 மணித்தியாலம் |

தொழில்சார் பரீட்சை:

| விடயம் | புள்ளிகள் |
|---|---|
| சுருக்கெழுத்து மற்றும் கணினி தட்டச்செழுத்து (சிங்களம்) | 100 |

(i) **பொது அறிவு மற்றும் கட்டுரை**.-உள்நாட்டு, சர்வதேச சமகால நிகழ்வுகள் தொடர்பான அறிவினைப் பரிசீலித்தல், சமகாலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தரப்பட்ட தலைப்புக்களிலிருந்து தெரிவுசெய்யப்பட தலைப்பொன்றி னைத் தெரிவுசெய்து கட்டுரை எழுதுதல் (குறித்த கருத்துக்களைச் சமர்ப்பித்தல் மொழித் திறன், சரியான இலக்கணம் மற்றும் எழுதும் விதம்).

(ii) **சுருக்கெழுத்துக்களை மற்றும் கணினி தட்டெழுத்து**.- ஐந்து (5) நிமிடத்தில் சுருக்கெழுத்து பந்தியை நிமிடமொன்றிற்கு 70 சொற்கள் என்ற வேகத்தில் தொடர்ச்சியாக வாசித்தல் மற்றும் இந்த சுருக்கெழுத்துப் பந்தியை நிமிடத்திற்கு 7 சொற்கள் என்ற வேகத்தில் சாதாரண மொழியில் எழுதுதல் தட்டெழுத்து நிமிடமொன்றிற்கு 20 சொற்கள் (20 நிமிடத்தில் ஒரு பந்தி).

7. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.-இது ஒரு போட்டிப் பரீட்சையாகையால் விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள தற்போதிருக்கின்ற வெற்றிடங்கள் பெறப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கினடிப்படையிலேயே நிரப்பப்படும். (இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளும் நிறைவேற்றப்படுதல் அவசியமாகும்).

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 350 ரூபாவாகும். கூறப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பெயரில் பெலவத்தை, இலங்கை வங்கி கிளையில் 0071451995 ஆம் இலக்கக் கணக்கில் வைப்புச் செய்து வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தங்களுடன் வைத்துக் கொள்வது பயனுள்ளது.

9. **விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல்**.- 9.1 இந்த அறிவித்தலில் இருக்கின்ற மாதிரிப் படிவத்திற்கமைவாக A4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தல் வேண்டும்:-

(அ) 01 முதல் 03 ஆம் பந்திகள் வரை முதல் பக்கத்திலும், ஏனைய பகுதிகள் மற்றும் பக்கத்தில வரும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், உரிய தகவல்கள் சொந்தக் கையெழுத்தில் தெளிவாக நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத, உரிய காலப்பகுதியில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் முழுமையாக உரியமுறையில் பூர்த்தி செய்யப்படாத, முழுமை பெறாத விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் முன்னறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். உரியமுறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களினால் விண்ணப்ப தாரிகளே பாதிப்பிற்குள்ளாவார்கள். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை தங்களுடன் வைத்துக் கொள்வது நன்மையக்கும் என்பதுடன், விண்ணப்பதாரிகள், பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பப்படிவமானது அறிவித்த லில் இருக்கின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்கு கின்றதா என்பதைக் கண்டறிதல் வேண்டும். அன்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

9.2 இந்தப் பரீட்சை 2014, மே மாதத்தில் நடாத்தப்படும்.

9.3 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, உரிய தகைமைகளை உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நிறைவுசெய்துள்ள, உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள மற்றும் கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற அறிவித்தலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்க ளைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவரையும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக அனுமதிப்பார்.

9.4 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் முறை.- உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2014.04.21 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் பத்தரமுல்லை, பெலவத்தை, பன்னிப்பிட்டி

வீதி, இல. 267, தேசிய தொழில் கற்கைள் நிறுவகம், பணிப்பாளர் அதிபதி என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணபப்பப்படிவத்தைக் கொண்டிருக்கின்ற தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் "வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014" என்று குறிப்பிடுதல் வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறுகின்ற மற்றும் தபாலில் அனுப்புகின்றபோது தவறுகின்ற விண்ணபப்பப்படிவங் களுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.

9.5 விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்க பாடசாலை யின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர், வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற பதவியை வகிக்கின்ற பொலிஸ் சேவை அலுவலர், வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற பதவியை வகிக்கின்ற அரச சேவை அலுவலர், அல்லது அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் பதவி வகிக்கின்ற அலுவலர் மற்றும் ஆண்டொன்றிற்கு 2,40,360 ரூபாவினை விஞ்சிய திரட்டிய வேதனத்தை பெறுகின்ற ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

**தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- விண்ணபப்பப்படிவத்தை பூர்த்தி செய்கையில் சரியான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். இந்த பரீட்சையின் ஒழுங்குகள், ஒழுங்குவிதிகள் நியதிகளின்படி விண்ணப்பதாரி தகைமையற்றவராக காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ பரீட்சார்த்தி நிலை செல்லுபடியற்றதாக்கப்படும் போது நியமனத்தின் பின்னர் இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரம் பிழையானது, தவறானது என்று கண்டறியப்பட்டால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படு வதற்கு பொறுப்பாவார்.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சை நடைபெறவுள்ள திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டைகள் பெறும் வகையில் அவை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியினால் விநியோகிக்கப்படும். அத்தகைய அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சைக்குத் தோன்றுகின்ற விண்ணப்பதாரிகள் அனைவரும் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகளை விநியோகித்ததன் பின்னர் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் ஊடக அறிவிப்பொன்றினைப் பிரசுரிக்கும் ஊடக அறிவிப்பினை வெளியிட்டு 02 அல்லது 03 தினங்களில் அனுமதி அட்டையினை நீங்கள் பெற்றிருக்காவிட்டால் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திற்கு அறிவித்தல் வேண்டும். விண்ணபப்பப்படிவத்திற்காக செலுத்திய பற்றுச்சீட்டினதும், பதிவு செய்யப்பட்டதற்கான பற்றுச்சீட்டினதும் சான்றுப்படுத்திய போட்டோப் பிரதியுடனும் உங்களது விசாரணையை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் மேற்கொள்வது பயனுள்ளதாகும்.

11. விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக பின்வருகின்ற ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

12. பரீட்சையை நடத்துவது தொடர்பில் தேசிய தொழில் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் மா அதிபதியினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு, ஒழுங்குவிதிகளுக்கு அனைத்துப் பரீட்சார்த்திகளும் அமைவானவர்கள். இந்த ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மீறப்பட்டால், தேசிய தொழில் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் மா அதிபதியினால் விதிக்கப்படுகின்ற ஏதேனும் தண்டனைக்கு தாங்கள் பொறுப்பாவீர்கள்.

13. இந்தப் பரீட்சையை நடத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம், நியமனங்களை வழங்குதல் மற்றும் பிற வேறு விடயங்கள், தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளருக்கு உரித்தளிக்கப் படுகின்றது.

**குறிப்பு**.- இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடு காணப்பட்டால் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

டபிள்யூ. ஜே. எல். யு. விஜேவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சு,
தொழில் செயலகம்.
2 ஆவது மாடி,
நாரஹேனபிட்டி,
கொழும்பு 05.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணபப்பப்படிவம்

**வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் (வகுப்பு III) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2014**

The Open Competitive Examination for the recruitment to the post of stenographer (Grade III) in the Office of the Commissioner for Workmen's Compensation - 2014

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்)
(உ-ம் : PERERA A.B.C.)

1.2 முழுப் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :-----.
1.3 முழுப் பெயர் : (தமிழ் மொழியில்) :-----.
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
1.5 பால் : ஆண் - 1
பெண் - 0

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :----.
2.2 நிரந்தர முகவரி: (தமிழ் மொழியில்) :-----.
2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முக வரி :-----.
I. (தமிழ் மொழியில்) :-----.
II. (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :-----.

2.4 தொலைபேசி இலக்கம் :-----.

3. 3.1 திருமணமானவரா/திருமணமாகாதவரா :

திருமணமானவர் - 2

திருமணமாகாதவர் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு: | | | | | மாதம் : | | | திகதி: | | |

3.3 விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் தினத்தன்று வயது:

வருடங்கள் : | | | மாதங்கள்: | | | நாட்கள்: | | |

3.4 பரம்பரையாக அல்லது பதிவின் மூலம் நீங்கள் இலங்கைப் பிரசை ஒருவரா? :-----.

4. கல்வித் தகைமைகள் :

4.1 க.பொ.த. (சா.த) பரீட்சை :

(i) ஆண்டு :-----. மாதம் :-----.

(ii) சுட்டெண் :-----.

(iii) பெறுபேறுகள் :

| பாடம் | பெறுபேறுகள் | பாடம் | பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4.2 க.பொ.த. (உ.த) பரீட்சை :

(i) ஆண்டு :-----. மாதம் :-----.

(ii) சுட்டெண் :-----.

(iii) பெறுபேறுகள் :

| பாடம் | பெறுபேறுகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

5. தொழில்சார் தகைமைகள்:

| பாடநெறியின் பெயர் | காலம் | நிறுவனம் |
|---|---|---|
| | | |

6. ஏதேனும் குற்றத்திற்காக சட்ட நீதிமன்றத்தில் நீங்கள் குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கின்றீர்களா?

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

ஏதேனும் குற்றத்திற்காக சட்ட நீதிமன்றத்தில் நீங்கள் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால் அதற்கான காரணம் ?

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

I. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலங்கை வங்கிக் கிளையின் பெயர் :-----.

II. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதி : இலக்கம் ....................
திகதி ....................

III. செலுத்தப்பட்ட தொகை :-----.

| பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும் |
|---|

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.-**

(அ) விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவையும், சரியானவையுமாகும் என்பதை நான் இத்தால் வெளிப்படுத்துவதுடன், தெரிவிக்கப்படாத மற்றும்/அல்லது தவறான தகவல்கள் காரணமாக ஏற்படுகின்ற ஏதேனும் பாதகத்திற்கு நான் பொறுப்பாவேன் என்பதை இத்தால் ஏற்றுக்கொள்கின்றேன். மேலும், இத்தால் தரப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் சரியானவையென்பதை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) பரீட்சையை நடத்துவது தொடர்பில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைவாக செயற்படுவதற்கு நான் இணங்குவதுடன்,இந்த நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவராக காணப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது அதற்கு பின்னரோ எனது பரீட்சார்த்தி என்ற நிலையை தகுதியற்றதாக்குவதற்கு எடுக்கப்படுகின்ற தீர்மானத்தினை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

(இ) என்னால் செய்யப்பட்ட வெளிப்படுத்தல் உண்மையற்றது அல்லது தவறானதென்று இந்தப் பதவிக்கு நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் மற்றும் அத்தகைய நிலைமை நான் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால், எதுவித நட்டஈட்டுக் கொடுப்பனவுமின்றி நான் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

(ஈ) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலிலும் பின்னர் நான் மாற்றம் எதனையும் செய்யமாட்டேன்.

................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல் :-**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ..................... என்பவரை நான் அறிவேன் என்றும், இவர் என் முன்னிலையில் .......................... ஆந் திகதி எனது கையொப்பத்தை இட்டுள்ளாரென்பதையும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

...........................
சான்றுப்படுத்துகின்ற அதிகாரியின்
கையொப்பமும், அலுவலக முத்திரையும்.

திகதி :-----.

சான்றுப்படுத்துகின்ற அலுவலரின் பெயர் :-----.

பதவி :-----.

முகவரி :-----.

3-688

## சுகாதார அமைச்சு

### விடுதி பொறுப்பாளி ஆண்/பெண் சேவையில் தரம் III இன் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

சுகாதார அமைச்சில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு - 2 சேவைக்குரிய விடுதிப் பொறுப்பாளி பெண் பதவிக்காக 2013.01.05 ஆந் திகதிய தினமின, பத்திரிகையிலும் 2013.01.11 ஆந் திகதிய தினகரன் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்பிற்கு இணங்க தகைமைகளை உடையவர்களிடமிருந்து போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காமையினால் மேற்படி பதவிக்கு மீண்டும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**கவனிக்க..** (மேற்குறிப்பிட்ட அறிவிப்பின் பிரகாரம் உரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இதற்காக மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.)

1. **ஆட்சேர்ப்பு முறைகள்**.-அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளுக்கிடையே சுகாதார அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் கூடிய புள்ளிகளைப் பெற்ற போட்டியாளர்கள் உடற் தகுதி மற்றும் தகைமைகள் என்பன பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சையின் பின் வெற்றிடங்களின் பிரகாரம் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

2.

(i) **கல்வித்தகைமைகள்:**

* கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரு பாடங்களில் திறமை சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

* கல்விப் பொதுத்தராதர (உயர்தரம்) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (சாதாரண பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

(ii) **அனுபவம்** .-அரச அல்லது அரசுடன் இணைந்த அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவன மொன்றில் விடுதிப் பொறுப்பாளராக இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்;

(iii) **உடற்தகைமைகள்** .-இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும், பதவிக்குரிய கடமைகளை செய்வதற்கும், போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iv) **வேறு**.-

* இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;
* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் தேவையான பிரகாரம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான மற்றும் சேவை நிபந்தனைகள்** .- (i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்துடனும் கூடியதாகும். விதவைகள்/தபுதாரர் அநாதை ஓய்வூதியத்திட்டத்திற்கு வேதனத்திலிருந்து உதவித் தொகை செலுத்துதல் வேண்டும் .

(ii) இப்பதவி 03 வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

(iii) அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் பிரகாரம் அல்லது அதனுடன் தொடர்புள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் இப்பதவிக்கு உள்வாங்கப்பட்டு 5 வருடங்களுக்குள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

(iv) 3 வருடத்திற்குள் முதலாவது வினைத் திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு - 2 சேவையின் ஆட்சேர்ப்பு விதிமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்பான காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம், அரச சேவை ஆணைக்குழுவின் சேவை நிபந்தனை, மற்றும் அரசினால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் விதிமுறைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(vi) பதவி உயர்வு திட்டம் முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் அல்லாத குழு - 2 சேவைக்குரிய விடுதிப் பொறுப்பாளி ஆண்/பெண் பதவிக்கு உரிய முறையில் இடம்பெறும்.

4. **வயதெல்லை**.-விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 30 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவு**.-பொது நிருவாக சுற்றறிக்கை 06/2006 (IV) இல் MN 01 - 2006 (ஏ) இன் கீழ்; ரூபா 13,120- 10 x 145 - 11 x 170 -10 x 240 - 10 x 320 - ரூபா 22,040. இதன் ஆரம்ப சம்பள அளவுத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

6. **எழுத்து மூலப் பரீட்சை**.- (அ) எல்லா விதத்திலும் பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை கீழுள்ளவாறு பாடங்களைக் கொண்டது.

| வினாப் பத்திரத்தின் பெயர் | விடயம் | காலம் | அதி கூடிய புள்ளி | சித்தி பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| I. பொது அறிவு | வெளிக்கள காரணிகள் சம்பந்தமாக அபேட்சகர் கொண்டுள்ள திறமை, பொது அறிவை பரிசீலித்தல் | 2 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| II. நுண்ணறிவு | சொற்கள் மற்றும் உருவமாக வழங்கும் சிக்கல் தொடர்பாக அபேட்சகர் வெளிப்படுத்தும் ஆற்றல் மற்றும் வெளிப்படுத்தும் | 1 1/2 மணித்தியாலங்கள் | 100 | 40% |

| வினாப் பத்திரத்தின் பெயர் | விடயம் | காலம் | அதி கூடிய புள்ளி | சித்தி பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| | பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், குறிப் பிட்ட கால எல்லை மற்றும் சந்தர்ப்பத்திற்குள் தொடர்பை விளங்கிக் கொள்வதை அபேட்சகர் கொண்டுள்ள திறமையை கணிப்பிடுதல் | | | |

**குறிப்பு**.-அனைத்து எழுத்துமூலமான விடைப்பத்திரத்தில் தெளிவற்ற எழுத்துக்கள் மற்றும் எழுத்துப் பிழைகளுக்கு புள்ளிகள் குறைக்கப் படும்.

(ஆ) இப்பரீட்சை இதனுடன் உள்ள அட்டவணையில் குறிப் பிடப்பட்டுள்ள நகரங்களில் மாத்திரம் நடைபெறும். விண்ணப்பப்பத்திரத்தில் தாம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விரும்பு நகரம் மற்றும் நகர இலக்கம் என்பவற்றை விருப்பத்தின் பிரகாரம் இடல் வேண்டும். கோரப்பட்ட நகரில் போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து இந்த நகரத்திற்கு அண்மையில் வேறு நகரில் அமையப் பெற்றுள்ள பரீட்சை நிலையமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரம் நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழியில் பிறகு மாற்றங்கள் செய்வதற்கு இடம் வழங்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் தகைமை பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மொழி அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சை அனுமதிப் பத்திரம் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு சுகதார அமைச்சின் பணிப்பாளர் (பரீட்சை) அவர்களினால் தபால் மூலம் அனுப்பப்படும்.

(இ) பரீட்சார்த்திகளை உறுதிப்படுத்தல்.- எழுத்துமூல பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ;
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7.விண்ணப்பிக்கும் முறை.-விண்ணப்பங்கள் 2014.04.25 ஆந்திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இதற்குப் பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் நேரடியாக ஒப்ப டைக்கப்படும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது:-

"பணிப்பாளர் (நிர்வாகம்) 03,
தொழில்நுட்பம் அல்லாத சேவைப் பிரிவு,
சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.

**8. விண்ணப்பப்படிவம் தயாரித்தல் மற்றும் பூரணப்படுத்து வதற்கான அறிவுரைகள்:**

(அ) விண்ணப்பப்படிவம் இந்த அறிவிப்பின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் ஏ-4 அளவினையுடைய கடதாசியின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து முதல் பக்கம் 1.0 இலிருந்து 5.1 வரையிலும், இரண்டாம் பக்கம் 5.2 இலிருந்து 9.0 வரையிலும் என்ற முறையிலும் தயாரித்து தமது கையெழுத்தில் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படுகின்ற உரையின் இடதுபக்க மேல்மூலையில் "விடுதி பொறுப்பாளி ஆண்/ பெண் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" எனவும், வர்த்தமானியின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றும் நகரம் மற்றும் நகர இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான் சத்திய ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/ முப்படைஅதிகாரி/பொலிஸ் பதவியில் வர்த்தமானி அறிவிப்பு வழங்க அதிகாரமுள்ள உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,73,060 இற்கு அதிகமாக வருட சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிலையான பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) **பரீட்சைக் கட்டணம்**.- விண்ணபத்தில் 'செயலாளர், சுகாதார அமைச்சு, "சுவசிறிபாய", 385, வண. பத்தேகம விமலவங்ச மாவத்தை, கொழும்பு 10' எனும் முகவரியிட்ட கொழும்பு பெரிய அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தக்கூடிய காசுக் கட்டளையினூடாக ரூபா 300 பரீட்சைக் கட்டணம் அனைத்து பரீட்சார்த்திகளினாலும் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீள வழங்கப்படமாட்டாது. இந்த காசுக்கட்டளையின் நிழற் பிரதி சமர்ப்பித்தல் அல்லது வேறு விதத்தில் பணம் செலுத்துதல் என்பன விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான காரணமாக அமையும்.

(உ) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத, தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யாத, பூரணப்படுத்தப்படாத விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் என்பன எவ்விதஅறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமையை அறிவிக்கப்படமாட்டாது.

**9. உண்மையற்ற தகவல்களை வழங்குதல்**.- உங்களினால் அனுப்பப்படும் விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் பொய் அல்லது பிழையானவையென சேவையில் இணைத்துக் கொள்வதற்கு முன் தெரியவருமிடத்து உங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறே பொய் அல்லது பிழையானவையென சேவையில் இணைத்துக் கொண்டதன் பின் தெரியவருடமிடத்து சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. பதவிக்காக இணைத்துக் கொள்ளல் சம்பந்தமாக இந்தப் பொது வர்த்தமானியில் உள்ளடக்கப்படாத ஏதேனுமோர் விடயம் சம்பந்தமாக பிரச்சினைகள் தோன்றுமிடத்து அது தொடர்பாக சுகாதார செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலும் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களை நிரப்பாமல்

இருப்பதும் அல்லது வெற்றிடத்தின் ஒரு பகுதியை நிரப்புதல் தொடர்பான இறுதித் தீர்மானம் சுகாதார செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏதாயினுமொரு வித்தியாசம் அல்லது ஒன்றுக்கொன்று முரணாக ஏற்படுமிடத்து சிங்கள மொழியில் குறிப்பிட்டவையே செல்வாக்குடையதாகும்.

வைத்தியர் நிஹால் ஜயதிலக்க,
சுகாதார செயலாளர்.

"சுவசிறிபாய",
சுகாதார அமைச்சு,
கொழும்பு 10.
2014.05.03.

**உப ஆவணம்**

பரீட்சை நிலையங்கள் அமையப்பெறும் நகரங்களும், நகர இலக்கமும்

| நகரம் | நகர இலக்கம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | கிளிநொச்சி | 14 |
| கம்பஹா | 02 | மட்டக்களப்பு | 15 |
| களுத்துறை | 03 | அம்பாறை | 16 |
| கண்டி | 04 | திருகோணமலை | 17 |
| மாத்தளை | 05 | குருநாகல் | 18 |
| நுவரெலியா | 06 | புத்தளம் | 19 |
| காலி | 07 | அனுராதபுரம் | 20 |
| மாத்தறை | 08 | பொலன்னறுவை | 21 |
| ஹம்பாந்தோட்டை | 09 | பதுளை | 22 |
| யாழ்ப்பாணம் | 10 | மொனராகலை | 23 |
| மன்னார் | 11 | இரத்தினபுரி | 24 |
| வவுனியா | 12 | கேகாலை | 25 |
| முல்லைத்தீவு | 13 | | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சில் விடுதி பொறுப்பாளி ஆண்/பெண் சேவையில் தரம் III இன் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

பரீட்சைக்கு கோரப்படும் நகரமும்,
நகர இலக்கமும்
(வர்த்தமானி அறிவிப்பின் பிரகாரம்)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்).

1 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) Mr./ Mrs./ Miss :-----.
(உதாரணமாக : SILVA A.B.)

1.2 முழுப் பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

1.3 முழுப் பெயர் : (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2. 2.1 நிரந்தர முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :---.

2.2 நிரந்தர முகவரி : (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.3 வசிக்கும் மாவட்டம் :-----.

2.4 தொலைபேசி இலக்கம் :-----.

2.5 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

3. 3.1 ஆண்/பெண் :-----.

3.2 பிறந்த திகதி :
ஆண்டு: மாதம்: திகதி:

3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3.4 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது:-
வருடங்கள்: மாதங்கள்: நாட்கள்:

4. 4.1 இலங்கைப் பிரஜையா ?
ஆம் இல்லை
(உரிய கூண்டினுள் "✓" அடையாளத்தை இடவும். )

5. கல்வித் தகைமை.- (உரிய சான்றிதழ்களை இணைத்தல் வேண்டும்)

5.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை

| | பாடம் | வருடம் | |
|---|---|---|---|
| | | பரீட்சை இலக்கம் | |
| | | சித்தி | |
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |
| 10 | | | |

5.2 க.பொ.த.(உ.த) பரீட்சை: பரீட்சை இலக்கம் :-----.

| | பாடம் | சித்தி |
|---|---|---|
| | | |
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

5.3 அனுபவம்:- உண்டு ☐ இல்லை ☐
(உரிய கூண்டினுள் "✓" அடையாளத்தை இடவும். )

உரிய விபரத்தைக் குறிப்பிடவும் :-----.

................................................................................................
(அரச அல்லதுஅரசுடன் இணைந்த அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விடுதிப் பொறுப்பாளராக இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் (உரிய சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்)

6. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உரிய பத்திரிகை அறிவிப்பின் படி நீங்கள் இதற்கு முன் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீர்களா ?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூண்டினுள் "✓" அடையாளத்தை இடவும். )

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய காசுக் கட்டளை தொடர்பான விபரம் :
7.1 பணம் செலுத்திய அலுவலகம் :-----.
7.2 காசுக்கட்டளை இலக்கமும் திகதியும் :-----.
7.3 செலுத்திய பணம் :-----.

| காசுக்கட்டளையை இங்கே ஒட்டவும்.<br>அதன் பிரதியினை வைத்துக் கொள்ளவும் |
|---|

8. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய அளவில் உண்மையானதும், உரிய பணத்தை செலுத்தி காசுக் கட்டளையை இங்கு ஒட்டியுள்ளதையும் உறுதி செய்கிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பிழை அல்லது தவறு என காணப்படுமிடத்து கண்டுபிடிக்கப்பட்ட தானது தேர்ந்தெடுப்பதற்கு முன் எனின் இவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும், தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின் எனின் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் நன்கறிவேன்.

.................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**9. விண்ணப்பதாரியின் கையொப்பதை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள திரு./ திருமதி./ செல்வி .......................... நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் ............... திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

...............
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

................................
(பதவி முத்திரை இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

3-775

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை - 2014

இந்த அறிவித்தலில் "சேவையின்" எனும் பதம் இலங்கை கணக்காளர் சேவையைக் (இ.க.சே.)குறிக்கும்.

1. **பரீட்சைத் திகதி.**- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2014, யூன் மாதத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

2. இந்தப் பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப் படுகின்ற வெற்றிடங்களின் அளவு பின்வருமாறு:
திறந்த - 62
மட்டுப்படுத்தப்பட்ட - 43

3. **ஆட்சேர்ப்பு முறை.**- நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவதானது, எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்று மொத்தப் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கின் பிரகாரம் பரீட்சித்தல் பரீட்சையொன்றுக்கு அழைத்து நியமனத்திற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் தகைமைகள் இருக்கின்றனவா என்பதைப் பரீட்சித்த பின்னரேயாகும்.

3.1 இந்தப் பதவிக்காக நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் செயல்வலுப் பெறுகின்ற திகதி என்பன அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

4. **தகைமைகள்:**

4.1 திறந்த போட்டிப் பரீட்சை

(அ) கல்வித் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலே வர்த்தகம், முகாமைத்துவம், கணக்கியல், பொருளியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்;

அல்லது

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின்/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமாதாரர் ஒருவராகவிருத்தல்;

அல்லது

(iii) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் அல்லது வேறொரு பொதுநலவாய நாட்டைச் சேர்ந்த இறுதி அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது அதிலும் கூடிய உயர்நிலைப் பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(iv) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டைச் சேர்ந்த பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஒன்றில் நடாத்தப்படும் செலவினம் மற்றும் முகாமைத்துவப் பரீட்சையின் I மற்றும் II ஆம் பகுதிகள் அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது அதிலும் கூடிய உயர்நிலைப் பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(v) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் நிறுவகத்தில் I ஆவது தொழில்சார் மட்டத்தில் அல்லது அதிலும் கூடிய உயர் மட்டத்திலான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(vi) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் பட்டயச் சங்கத்தின் I ஆவது II ஆவது பகுதிக்குரிய பரீட்சை அல்லது அதிலும் கூடிய பரீட்சை ஒன்றிலே சித்தியடைந் திருத்தல் வேண்டும்;

அல்லது

(vii) ஐக்கிய இராச்சியத்தின் செயலாளர்களின் மற்றும் நிருவாகிகளின் பட்டய நிறுவனத்தின் இறுதிப் பரீட்சை

(ஆ) **உடல்சார் தகைமைகள்** .- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு அனைத்து வழிகளிலும் உடல்சார் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) **ஏனைய தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்

(iii) திறந்த போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் எந்தவொரு நபருக்கும் தோற்றுவதற்கு அனுமதி கிடையாது.

(iv) யாதேனுமொரு சமயத் தலைவராக செயற்படும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற மாட்டார்.

(v) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக கருதுவதற்கு விண்ணப்பதாரர், 5.1(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2014.03.28 ஆம் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஈ) **வயது**.- 2014.03.28 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று) 22 வயதிற்குக் குறையாதவராகவும், 28 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

ஶ்ரீ 4.2 **மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை :**

(அ) அனுபவத்திற்கான தகைமைகள் :

(i) மேற்படி 5.1(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு தகைமையுடன் 2014.03.28 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று) அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான, தொடர்ச்சியான, நிரந்தர சேவைக் காலம் ஒன்றுடன் குறித்த தினத்தன்று ஆகக் குறைந்தது 05 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய MN1-2006(ஏ) சம்பள அளவுத் திட்டத்தில் அல்லது அதிலும் கூடிய சம்பள அளவுத் திட்டத்திற்குரிய பதவி ஒன்றில் 10 வருடங்களிற்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் 10 சம்பள ஏற்றங்களை ஆகக்குறைந்தது பெற்றிருத்தல்.

(ஆ) உடல் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) ஏனைய தகைமைகள்:

(i) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்

(ii) விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுவதற்கு முந்திய ஐந்து வருட காலப் பகுதியினுள் உரிய தினத்தில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) 2014.03.28 ஆந் திகதியன்று **(அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று)** முந்திய ஐந்து வருட காலத்தினுள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல்.

(iv) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவை களுக்கு மேல் தோற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

(v) யாதேனுமொரு சமயத் தலைவராக செயற்படும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்.

(vi) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்று வதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவராகக் கவனத்திற் கொள்வதற்கு குறித்த விண்ணப்பதாரர், 5.2(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2014.03.28 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையின் நியமனங்களை நிருவகிக்கின்ற பொது நிபந்தனைகளுக்கும், இலக்கம் 1670/30 மற்றும் 2010, செத்தெம்பர் 10 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்தப் பிரமாணக்

குறிப்புக்கு செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரியொருவர் இலங்கை கணக்காளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்.

(அ) இந்தப் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியச் சம்பளத்தைக் கொண்டதாகும். மேலும் தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறைக்கு/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ஆ) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்கள் இலங்கை கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான 1 ஆவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்களுக்குள் சித்தியடைதல் வேண்டும்.

(இ) பொது நிருவாகச் சுற்றறிக்கை 07/2007 மற்றும் அதனுடன் தொடர்பபட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவியில் இணைந்து 05 வருடங்களுக்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழி தொடர்பாக உரிய தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டிய அதேவேளையில் அரச கரும மொழி அல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் இணைந்த அலுவலர்கள் தகுதிகாண் காலப்பகுதியில் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

*6. **கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் எஸ்.எல் 1-2006 சம்பளத் தொகுதியின் பிரகாரம், மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம் :*

SL*1 - 2006 - ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1050 - ரூ. 53,555.*

*7. **பரீட்சைக் கட்டணம்** .-திறந்த போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ.1000/= ஆகும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ.1000/= ஆகும். விண்ணப்பதாரர் ஒருவர் இரண்டு பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் கட்டணமாக ரூ. 1500 அறவிடப்படும். இக்கட்டணத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்புச் செய்வதற்காக பிரதேச செயலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் உரிய பெட்டியில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை விண்ணப்பதாரர்கள் தம்மிடம் வைத்துக்கொள்ளல் பயன்மிக்கதாக அமையும். இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.*

*8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பத்தை இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ-4 அளவிலான கடதாசி ஒன்றில் தயாரித்து விண்ணப்பதாரரினாலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.*

(ஆ) விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 முதல் இலக்கம் 03 வரையில் முதற் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழியிலேயே நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் விண்ணப்பத்தினை தயாரிக்கும் போது அதன் தலைப்புக்களை ஆங்கில மொழியில் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) குறிப்பிடுதல் கட்டாயமானதாகும். (12 ஆவது பந்தியைப் பார்க்கவும்)

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2014.04.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ''பரீட்சைகள் ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''திறந்த போட்டிப் பரீட்சை, கணக்காளர்'' என்று தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு** : அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும், திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தை திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(ஈ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களினூடாக பதிவுத் தபாலில் 2014.04.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு ''பரீட்சைகள் ஆணையாளர், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, கணக்காளர்'' என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எதுவித விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட் மாட்டாது.

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை ஆகிய இரண்டிற்கும் தோற்றும் பட்சத்தில் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை, கணக்காளர்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

(உ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் இருந்த விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்காகவும் உரித்தாகின்ற அதேவேளையில், விண்ணப்பங்களை அனுப்பிய பின்னர் அது சம்பந்தமாக இடம்பெறுகின்ற மாற்றங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பட்ட வுடனேயே அது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்த லொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கா விட்டால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதில் விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட வேண்டிய அதேவேளையில், அவ்வாறு விசாரணை செய்கின்ற சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை தபாலிடும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை

தன்வசம் வைத்திருப்பது அத்தியவசியமானதாகும். கொழும்புக்கு வெளியிலிருக்கும் விண்ணப்பதாரியாயின் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தொலைநகல் இலக்கத்தையும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதம் ஒன்றை தொலைநகல் மூலம் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரணை செய்வதும் பயனுடையதாக இருக்கும்.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, உரியவாறு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் உரிய முறையில் கையொப்பத்தை உறுதி செய்து தமது அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். தமது அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் நாளன்று அதற்குப் பொறுப்பான அதிகாரியிடம் வழங்குதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்றினை அனுப்பியுள்ளமை, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்று பொருள்கொள்ளக் கூடாது.

(ஈ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அவ்வாறான சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

10. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்** .- தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான தலைமை அதிகாரி திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் யாதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை

(ஆ) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான கடவுச் சீட்டு

விண்ணப்பதாரரின் அலுவலக அடையாள அட்டை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. **போலியான தகவல்களை வழங்குதல்**.- விண்ணப்பதாரர் ஒருவர் தகைமை பெறாதவர் என்று கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் அல்லது அதன் பின்னர் எந்தவொரு சர்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வழங்கியுள்ள யாதேனுமொரு விடயம், அவர் போலியானதென தெரிந்து கொண்டே வழங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்படின், அல்லது யாதேனுமொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு.

12. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை முறை**.- பரீட்சை மொழிமூலம் :

(அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தாம் விரும்பிய ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு:**

(i) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவருக்கு தமது விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

14. **பரீட்சித்தல் முறை**.- (அ) பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சை ஒன்று: இவ்வினாத்தாள்கள் அனைத்தும் கட்டாய வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியது கட்டாயமானதாகும் :-

1. நிதி கணக்கியல் - வினாத்தாள் I - (காலம் :03மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
2. நிதி கணக்கியல் - வினாத்தாள் II - (காலம்: 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
3. செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் - (காலம்: 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
4. அரச நிதி முகாமைத்துவம் - (காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
5. கணக்காய்வு மற்றும் விசாரணை - (காலம்: 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
6. பொது விவேகம் மற்றும் கிரகித்தல்- (காலம்:03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

பாடத்திட்டம் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

(ஆ) நேர்முகப் பரீட்சை.- எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக் குறைந்தது 40% வீதப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள அபேட்சகர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய அபேட்சகர்களின் எண்ணிக்கையானது தேவைக்கேற்ப எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுரையின் பிரகாரம் எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகள் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்படும்.

*15.* சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலை ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும்போது யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

*16.* **நியமனம் செய்வதற்கு தெரிவுசெய்யும் முறை.-** திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் உச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள திறமையின் ஒழுங்கு முறைப்படி மற்றும் நேர்முகப் பரீட்சையில் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்ற நபர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் சம அளவான புள்ளிகளைப் பெற்றிருப்பின் தெரிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் காணப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின்
கட்டளையின் பிரகாரம்,

(பேராசிரியர்) பீ. எம். எஸ். பட்டகொட,
திறைசேரியின் பிரதிச் செயலாளர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு
கொழும்பு 01

விண்ணப்பப் படிவம்

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/ திறந்த போட்டிப் பரீட்சை - 2014**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF THE SRI LANKA ACCOUNTANTS' SERVICE - 2014

| | |
|---|---|
| பரீட்சை இலக்கம் : | |
| (அலுவலக பயன்பாட்டிற்காக)<br>பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | நகர இலக்கம் |
| விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் நகர இலக்கம் என்பவற்றினைக் குறிப்பிடவும்.<br>(கொழும்பு - 1, யாழ்ப்பாணம் - 2) ☐<br>* நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. | |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :<br>சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 ☐<br>(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்)<br>* பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.<br><br>நீங்கள் விண்ணப்பிப்பது திறந்த பரீட்சைக்கா / மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கா அல்லது இரண்டுக்குமா என்பது பற்றி<br>மட்டுப்படுத்தப்பட்ட -1, திறந்த -2, இரண்டுக்கும் -3 ☐<br>(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்) | |

1.0 பெயர்:
- 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: Mr./Mrs./Miss :----.
  (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
  (உ+ம்) Mr./~~Mrs./Miss~~. SILVA, A.B
- 1.2 முழுப் பெயர்:-----.
  (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
- 1.3 முழுப் பெயர் :-----.
  (சிங்களத்தில்/தமிழில்)
- 1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.0 நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
- 2.1 நிரந்தர முகவரி :-----.
  (சிங்களத்தில்/தமிழில்)
- 2.2 அலுவலக முகவரி :-----.
  (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
- 2.3 அலுவலக முகவரி :-----.
  (சிங்களத்தில்/தமிழில்)
- 2.4 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :-----.
  (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் அவரது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்)

3.0.
- 3.1 பால்: பெண் - 1, ஆண் - 0 ☐
  (உரிய இலக்கத்தை எழுதவும் )
- 3.2 விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி:
  விவாகமானவர் - 1
  விவாகமாகாதவர் - 2 ☐
  (உரிய இலக்கத்தை எழுதவும்)
- 3.3 பிறந்த நாள்:
  ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ நாள்: ☐☐
- 3.4 2014. .03.28 ஆந் திகதியன்று வயது :
  வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐
  அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று

4.0 (திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்ப தாரர்களினால் நிரப்புவதற்காக) பின்வரும் விபரங்களை வழங்கவும்
- 4.1 அறிவித்தலின் 5.1 பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதற்காக பெற்றுள்ள தகைமைகள்:-----.
- 4.2 அத்தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங் கள்:-----.

5.0 (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் நிரப்புவதற்காக) பின்வரும் விபரங்களை வழங்கவும்)
- 5.1 அறிவித்தலின் 5.2 பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதற்காக பெற்றுள்ள தகைமைகள்:-----.

5.2 அத்தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள்

(அ)

| பணியாற்றியுள்ள திணைக்களங்கள் | பதவி | முதல் | வரை | கால எல்லை |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ)

i. சேவை/பதவி :-----.
ii. வகுப்பு:----- ஆந் திகதி முதல்
iii. வகுப்பு:----- ஆந் திகதி முதல்
iv. 2014.03.28ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று) அரசாங்கத்தின் கீழ் மொத்த சேவைக் காலம்: வருடங்கள்:-----. மாதங்கள்:-----. நாட்கள்:-----.

(அ) மேற்படி ii இல் சேவை:
வருடங்கள்:-----. மாதங்கள்:-----.

(ஆ) மேற்படி iii இல் சேவை:
வருடங்கள்:-----. மாதங்கள்:-----.

v. 2014.03.28 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் வெளி யிடப்படும் தினத்தன்று) வருடாந்தச் சம்பளம் :-----.

6.0.

6.1 இலங்கைக் கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு நீங்கள் தோற்றிய ஆண்டு:
1..........................................
2..........................................
3..........................................

6.2 இலங்கைக் கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு நீங்கள் தோற்றிய ஆண்டு:
1..........................................
2..........................................
3..........................................

7.0 பணம் செலுத்திய பற்றுச் சீட்டை கழறாதவாறு விண்ணப்பத்தில் ஒட்டவும்

| பற்றுச் சீட்டை ஒட்டுவதற்காக |
|---|

i. செலுத்திய தொகை: ரூபா :-----.
ii. பணம் செலுத்திய இடம்:-----.
iii. பற்றுச்சீட்டு இலக்கம்:-----.
iv. பணம் செலுத்திய திகதி :-----.

8.0 **விண்ணப்பதாரரின் உறுதியுரை:**

8.1 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் மற்றும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலக்கம் .......................... மற்றும் ...................... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும், குறிப்பிட விரும்புகிறேன். மேலும், பரீட்சை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும், இப்பரீட்சைக்குரிய நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவரென அடையாளம் காணப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது அது நடைபெறும் வேளையில் அல்லது அதன் பின்னர் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனும் தீர்மானத்திற்கு நான் உடன்படுவதாகவும், பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு நான் உடன்படுவதாகவும் உறுதியளிக்க விரும்புகிறேன்.

8.2 2014.03.28 ஆந் திகதிக்கு (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று) முந்திய ஐந்து வருட காலப் பகுதியினுள் (சேவை அல்லது திணைக்கள நிபந்தனைகளில் ஒன்றான சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களும் என்னால் உழைக்கப் பட்டுள்ளது எனவும், (எச்சரிக்கை விடல் தவிர்ந்த) எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் நான் ஆளாகி இல்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி:-----.

.................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

9.0

9.1 **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:** (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மற்றும் தேவையாயின் மாத்திரம் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்க்கும் செய்தல் வேண்டும்.) தமது அந்தரங்க கோப்புக்களை பேணிவரும் அலுவலகத் தலைவரே திணைக்களத் தலைவராக கையொப்ப மிடுதல் வேண்டும்.)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ............... ......... எனும் பெயருடைய விண்ணப்பதாரர் ............... ஆந் திகதி முதல் இந்த அலுவலகத்தில் பணியாற்றுவதாகவும், அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை எனவும், மேற்படி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் இந்த அலுவலகத்தி லுள்ள ஆவணங்களில் இருந்து நான் தனிப்பட்ட முறையில் பரீசித்துப் பெற்றுக் கொண்டவை எனவும், 2014 ............................ மாதம் ............... ....... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கைச்சாத்திட்டதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி :-----.

...................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:-----.
பதவி :-----.
முகவரி: :-----.
(இறப்பர் முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

9.2 **உறுதிப்படுத்துதல்**.- (திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் தேவையாயின் மாத்திரம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.):-

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ......................... எனும் பெயருடைய விண்ணப்பதாரரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் என் முன்னிலையில் இங்கு கைச்சாத்திட்டதாகவும், உறுதிப்படுத்துகிறேன்.

............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்.
பதவி முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

**குறிப்பு**: உறுதிப்படுத்துபவர் சமாதான நீதவான் ஒருவராக, சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவராக, சட்டத்தரணி ஒருவராக, நொத்தாரிசு ஒருவராக அல்லது வருடாந்தம் ரூ.230,700/= இற்குக் குறையாத திரண்ட சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

*பின்னிணைப்பு – 1*

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிப்பதற்காக நடாத்தப்படும் திறந்த/வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைகள் தொடர்பான பாடத்திட்டம் பற்றிய விபரம்** :

பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்:-

பகுதி 'அ'

| இல | விடயங்கள் | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்திப் புள்ளி | காலம் |
|---|---|---|---|---|
| 01 | நிதிக் கணக்கியல் I | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 02 | நிதிக் கணக்கியல் II | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 03 | செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 04 | அரச நிதி முகாமைத்துவம் | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 05 | கணக்காய்வு மற்றும் விசாரணை | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 06 | பொது விவேகம் மற்றும் கிரகித்தல் | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |

**பாடத் திட்டம்**:

பாட இலக்கம் 01 மற்றும் 02 நிதிக் கணக்கியல் I மற்றும் II

நிதி கணக்கீட்டின் தன்மை மற்றும்
கணக்குகளைப் பயன்படுத்துவோரும் அவர்களுக்குத் தேவைப்படும் தகவல்களும்
கணக்கீட்டு முறைமை

கணக்கீட்டுச் சமன்பாடுகள், இரட்டைக் கணக்குப் பதிவு முறையும் கணக்கீட்டு முறைமைகளும், ஆரம்பப் பதிவேடுகளும் பேரேடுகளும், மீதியினைப் பரீட்சித்தல், திரண்ட முற்பணக் கொடுப்பனவுகள், சீராக்கங்கள், மூலதன செலவினம், வருமானச் செலவு, பெறுமானத் தேய்வு, தொங்கல் கணக்குகள், கணக்கிணக்கக் கூற்றுகள், பூரணப்படுத்தப்படாத அறிக்கைகள்.

**இறுதிக் கணக்குகள்**

உற்பத்திக் கணக்கு, வியாபார இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகை, நிதிப் பாய்ச்சல் கூற்றும் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு.

**பங்குடமை கணக்கீடு**

பங்குடமை உடன்படிக்கைகள், பங்குடமையில் கணக்கு பதிவுகள், நிலையான மூலதனக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், கடன் கணக்குகள், மீளப் பெறல் கணக்குகள், பங்குடமை இறுதிக் கணக்கினைத் தயாரித்தல், பங்குடமை இணைப்பு மாற்றங்கள், நன்மதிப்பினைப் பேணுதலும் பங்காளர்களை அனுமதித்தலும், பிற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான நடவடிக்கைகள், பங்குடமையைக் கலைத்தல், கூட்டு முயற்சிகள்.

**பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் கணக்கீடு**

பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் தன்மை, உத்தியோக நிரல்படுத்தப்பட்ட கம்பனிகள் மற்றும் பங்குச் சந்தை, பங்குடமை மற்றும் கடன் மூலதனம், பகிரத்தக்க இலாபம், உள்ளக மற்றும் வெளி பயன்பாட்டிற்கான இறுதிக் கணக்குகள், கணக்குக் கூற்றுக்களுக்கான பொருள்கோடல், கணக்கீட்டு விகிதங்கள்.

**விசேட கொடுக்கல் வாங்கல்களுக்கான கணக்கீடு**

கம்பனிகள், சங்கங்கள், கையிருப்பு, வாடகைக் கொள்வனவும் கடன் விற்பனைகளும், குத்தகைக்கு விடல், முதலீடுகள், செலாவணி உண்டியல்கள், நீண்டகால ஒப்பந்தங்கள், வேத்துரிமைகள், வெற்றுக் கணக்குகள், வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்.

**கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு கணினிகளைப் பயன்படுத்தல்**

கணினிகளின் வகைகள்/வன்பொருள் மற்றும் மென்பொருள், கணிணி விநியோக மென்பொருள், இலத்திரனியல் கணக்குத் தாள்கள், கணனிமயப்படுத்திய கணக்கீடு.

**விடய இல.03 - செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல்**

செலவினக் கணக்கீடு, நிதிக் கணக்கீடு, முகாமைத்துவக் கணக்கீடு,
ஆகு செலவுக் கணக்கீட்டின் நோக்கம்,
கணக்கியலை முகாமைத்துவத் துணைக் கருவியாகப் பயன்படுத்தல்.

**பொருட் செலவு**

கொள்வனவு நடைமுறைகள், களஞ்சிய முறைகள், பொருள் வழங்கலை மதிப்பிட்டு செய்யும் முறைகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவும் மிகையூதியக் கொடுப்பனவும்.

**ஊழியச் செலவு**

நேரம் பதிதல், நேரம் ஒதுக்குதல், சம்பள கொடுப்பனவு முறைகள், மிகையூதியக் கொடுப்பனவுகளும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும், சம்பளங்கள் மற்றும் கூலிகள் என்பவற்றினை புத்தகப் பதிவு வைத்தல்.

**பொது விடயங்களுக்கான செலவுகள்**

வகைப்படுத்திய ஒதுக்கங்கள் மற்றும் விநியோகம், அகற்றல் முறைகள், பொது விடய நிருவாகம், வியாபாரம் மற்றும் விநியோகம் பற்றிய பொது விடயச் செலவுகள்.

**திரண்ட மற்றும் திரளாத கணக்குகள்**

செலவுக் கட்டுப்பாட்டுக் கணக்குகள், செலவு மற்றும் நிதிக் கணக்குகளின் கணக்கிணக்கம், முழுமைக் கணக்குகள்.

**செலவீட்டு முறைகள்**

ஒப்பந்தச் செலவீடு, தொழில் செலவீடு, திணைக்கள செலவீடு, பொருள் செலவீடு, செய்முறைச் செலவீடு, அலகு செலவீடு, சேவைகள் செலவீடு, வெவ்வேறு செலவீட்டு முறைமைகளின் கீழ் தேறப்பெறாத இலாபம்.

**எல்லை நிலைச் செலவீடு**

பங்களிப்புக்கள்/விற்பனை, சமவரவு குறிப்புக்கள், எல்லை நிலைச் செலவீட்டின் பிரயோகங்கள், எல்லை நிலைச் செலவீட்டுடன் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகள்,

**நியம செலவீடு**

நியம செலவுகள், உண்மையான செலவுகள், அடிப்படை வேறுபாடுகள், கணக்கீட்டு நடைமுறைகள்

**வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

தொழிற்பாட்டு வரவு செலவுத் திட்டம், பிரதான வரவு செலவுத் திட்டம், நெகிழ்வுத் தன்மைமிக்க வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, தொடர் வரவு செலவுத் திட்டவாக்கம் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடு.

**விடய இல.04 - அரச நிதி முகாமைத்துவம்**

**அரச நிதி தொடர்பான சட்டத் தன்மை**

திரண்ட நிதியம், விசேட சட்டச் செலவினம், நானாவித நிதியம், அரச படுகடன், வெளிநாட்டு உதவி, அரசிறைச் செயல்முறைகள்.

**பொறுப்புக்கள்**

பாராளுமன்றத்தின், நிதி அமைச்சரின், திறைசேரியின் கணக்காளர் நாயகத்தின், கணக்காய்வாளர் நாயகத்தின், அரச கணக்குகள் குழுவின், அரச தொழில் முயற்சிகள் குழுவின், பிரதான கணக்கீட்டு அலுவலரின், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மற்றும் நாணயச் சபையின் பொறுப்புக்கள்.

**வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலம்**

வரவு செலவுத் திட்ட முறைமையும் நடைமுறைகளும், வருமான செலவின மதிப்பீடுகளும்

**வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துதல்.**

வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒழுங்குக் கட்டமைப்பு, வருமான சேகரிப்பு ஒழுங்கு விதிகள், கொடுப்பனவு செலுத்துவதற்கான கட்டு நிதி, நிதி தொழிற்பாடுகளின் கண்காணிப்பு, பணிகளை கையளித்தல், ஒம்புட்ஸ்மன் நடைமுறைகள், வீரமொங் ஒழுங்கு விதிகள், குறைநிரப்பு மதிப்பீடுகள், வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, கொள்வனவு நடைமுறைகள்.

**அரசாங்க கணக்கீட்டு முறைமையும் நடைமுறைகளும்**

அரசாங்க சொத்துக்கள் பற்றிய பொறுப்புக்கள், வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் பற்றிய கணக்கீடு, செலவினம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான கணக்கீடு, வெளிநாட்டு உதவிக்கான கணக்கீடு, நட்டத்தை கைவிடல் மற்றும் பதிவழித்தல் பற்றிய கணக்கீடு.

**மீளாய்வு**

உடனடி அறிக்கைகள், மாதாந்த கணக்குச் சுருக்கங்கள், நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை மீளாய்வு, வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, நாட்டின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, அரச கணக்குகள் குழுவின் சாராம்சம், அரச தொழில் முயற்சிகள் குழுவின் அறிக்கை.

**விடய இல 05 - கணக்காய்வும் விசாரணைகளும்**

கணக்காய்வின் தன்மை மற்றும் குறிக்கோள் - கணக்காய்வின் பொறுப்புக்கள்

உள்ளக கணக்காய்வு, புறக்கணக்காய்வு, சட்டவாக்கம் : இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் கூட்டுத்தாபனங் களுடன் தொடர்புடைய சட்டமல்லாத – 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், கணக்காய்வு நியமங்கள், கணக்காய்வு அபிப்பிராயங்கள், கணக்காய்வின் எண்ணக்கருக்கள் கணக்காய்வாளரது சுதந்திரமும் பிற ஆள்சார் பண்புகளும், உண்மை மற்றும் நியாயத் தன்மை, பௌதீகத் தன்மை, கணக்காய்வுத் தன்மைகள், கணக்காய்வாள ரின் பொறுப்புகள், கணக்காய்வுக்கு உட்பட்டவரின் பொறுப்புகள்.

**பாடத்திட்டமும் எல்லைகளும்**

பாடத்திட்டத்தை நிர்ணயித்தல், கருதுகோள் மற்றும் வரையறைகள்

**கணக்காய்வுத் தரங்கள் மற்றும் வழிகாட்டல்களின் பொறுப்புக்கள்**

கடமையாற்றுதல் கடிதங்களின், முகாமைத்துவ கடிதங்களின் மற்றும் பிரதிநிதித்துவ கடிதங்களின் பொறுப்புக்கள், அடிப்படை கணக்காய்வு முறைமைகள் மற்றும் மீளாய்விற்கான ஒழுங்கு விதிகள், உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீடுகள்

**அளவுத்திட்ட வரைபடங்கள், கேள்விக் கொத்துக்கள்**

**கணக்காய்வு திட்டமிடலும் கட்டுப்பாடும்**

கணக்காய்வு திட்டமிடலும், நேரம் குறித்தல், இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வு, செயற்பாடுகளுக்கு பொறுப்பு வழங்குதல், கணக்காய்வுக் கட்டுப்பாடு, உள்ளகக் கட்டுப்பாட்டுப் பயன்பாடு உள்ளடங்கலாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளை பதிவு செய்தல், உள்ளக வேலைகளை பதிவு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடு மதிப்பீட்டிற்கான வினாக் கொத்தக்களையும் படிவங்களையும் தயாரித்தல்.

நிதிக் கணக்காய்வுக்கான பெறுமதிகள், எண்ணக்கருக்கள் மற்றும் பண்புகள்

அது அரசாங்கத் துறையுடன் தொடர்புபடும் விதம், பகுப்பாய்வு ரீதியான கணக்காய்வு

கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் கணக் காய்வு – வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

நியதிச்சட்ட ஆவணங்கள், பணிப்பாளர்களின் தத்துவங்களும் கடமைகளும், பங்கிடக் கூடிய இலாபங்கள், கணக்காய்வாளர் களின் நியமனம், ஊதியமும் நீக்கமும், புதிய கணக்காய்வாளர் களை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், கணக்காய்வாளர்களின் தத்துவங்களும் கடமைகளும்.

**பரிசோதனைகளின் தன்மையும் அளவும்**

ஒப்பீட்டுப் பரீட்சை, சுயாதீனமான பரிசோதனை, மாதிரி நுட்பங்கள், ஐந்தொகை சரிபார்த்தல், வருமான செலவின கணக்குகளை சரிபார்த்தல்.

**கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்காளர்களின் தொழில்சார் பொறுப்புக்கள்**

தொழில்சார் நடத்தையும் ஒழுக்கவியலும், சட்ட உரிமைகளும் பொறுப்புகளும், கணக்காளர் மற்றும் கணக்காய்வாளர்களின் சட்ட ரீதியான பொறுப்பும் நிகழ்வுகள் தொடர்பான சட்டரீதியான விடய அறிவுடன் தொடர்புடைய சட்டங்களும்.

**விசாரணைகள்**

விசாரணையுடன் தொடர்புடைய பாடத் திட்டத்தை திட்டமிடல், பயன்படுத்த வேண்டிய நுட்பங்களும் நடைமுறைகளும், புலனாய்வு நடத்துவதற்கான எண்ணத்தின் உதாரணங்கள், சாத்தியவள ஆய்வுகள், கொள்வனவு, விற்பனை, கடன் வழங்கல், விலையிடல் போன்ற வியாபார நிறுவனங்களின் மதிப்பீடுகள். தகவல் தொகுப்பு அறிக்கைகளுக்கான கணக் காளர்கள், கணக்காய்வாளர்களின் அறிக்கை, அறிக்கையிடல் செயற்பாடுகள், மோசடி புலனாய்வுகள், கருத்திட்ட மதிப்பீடுகள்.

**அறிக்கையிடல் தொழிற்பாடுகள்**

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் பலவீனங்கள் பற்றி முகாமைக்கு அறிவித்தல், அரச மற்றும் கூட்டுத்தாபன கணக்காய்விற்கு எழுத்து மூலம் விசேட அறிக்கையிடல் பணிகள், தகவற்தொகுப்பு அறிக்கைகள், விசாரணை அறிக்கைகள்.

**விடய இல. 06 பொது விவேகமும் கிரகித்தலும்**

**பகுதி 'அ'**

கிரகித்தல் வினாத்தாளில் தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுவர். இன்னுமொரு உரைப்பகுதியும் தரப்படும், அதன் சாராம்சத்தை உரைப்பகுதியிலுள்ள சொற்களில் மூன்றிலொரு பகுதிக்கு சுருக்குமாறு கேட்கப்படும்.

**பகுதி 'ஆ'**

**விவேகம்**

**குறிப்பு :**

I மேற்படி (ஆ) மற்றும் (இ) இலுள்ள "தகைமை பெற்ற பரீட்சை" என்ற சொல்லின் மூலம் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றினைக் குறிக்கும்.

II பரீட்சாத்திகள் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் பதிலளித்தல் வேண்டும்.

III தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு பரீட்சாத்திகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(அ) பரீட்சாத்தி ஒருவர் தகைமை பெற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஆ) பரீட்சாத்தி ஒருவர் தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின், அப்பரீட்சையில் அவர் கூடுதலான பாடங்களை எந்த மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும், மேலதிக பாடத்தை வேறொரு மொழியிலும், சித்தியடைந்துள்ள விசேட பட்டம் ஒன்றினைப் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர் பிரதான பாடங்களை சித்தியடைந்த மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

## சுகாதார அமைச்சு

### மருத்துவ விடயங்களுக்காக நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்வல்லுநர்கள் சேவை மற்றும் துணை மருத்துவ சேவை பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு - 2014

சுகாதார அமைச்சில் மருத்துவ விடயங்களுக்காக நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் சேவை மற்றும் துணை மருத்துவத் துறையின் கீழ் கீழே குறித்த தொழிற்பயிற்சிக்காக தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| குறியீட்டு இல. | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சிக்கான காலம் | தொழிற்பயிற்சி வழங்கப்படும் மொழி |
|---|---|---|---|
| 1. | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 2. | மருந்தாளர் பயிலுனர்கள் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 3. | பௌதீக சிகிச்சையாளர் பயிலுனர்கள் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 4. | தொழில்சார் சிகிச்சையாளர்கள் பயிலுனர்கள் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 5. | கதிரியக்கவியலாளர் பயிலுனர்கள் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 6. | பொது சுகாதார பரிசோதகர் பயிலுனர்கள் | 1 1/2 (6 மாதங்கள் வெளிக்களப் பயிற்சி) | சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம் |
| 7. | ஈ. சி. ஜீ. தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் | 01 வருடம் | ஆங்கிலம் |
| 8. | ஈ. ஈ. ஜீ. ெ தாழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் | 01 வருடம் | ஆங்கிலம் |
| 9. | கண் தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் | 02 வருடம் | ஆங்கிலம் |
| 10. | பல் தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் | 02 வருடம் | ஆங்கிலம் |
| 11. | பூச்சியியல் உதவியாளர் பயிலுனர்கள் | 02 வருடம் | ஆங்கிலம் |
| 12. | பாடசாலை பல் சிகிச்சையாளர் பயிலுனர்கள் | 02 வருடம் | ஆங்கிலம் |

1. க. பொ. த. (உ. த.) இல் பெற்றுக் கொண்ட Z புள்ளிக்கமைய தயாரிக்கப்பட்ட முதன்மை அட்டவணை அடிப்படையில் 30 வீதமும் மாகாண ரீதியில் தகைமை அடிப்படையில் 70 வீதமும் தெரிவு செய்யப்படுவர். பயிற்சிக்காக மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கை அம்மாகாணத்திலுள்ள சுகாதார அமைச்சின்கீழ் உள்ள மற்றும் மாகாணங்களுக்குரிய வைத்தியசாலைகள், தாபனங்கள் என்பவற்றின் வெற்றிடங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

ஒரு பயிற்சிக்காக க.பொ.த. (உ.த) Z புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு பல வருடங்களுக்குரிய உ. த. பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் பயிற்சிக்குத் தேவையான முழுப் பயிலுனர்களின் எண்ணிக்கையைத் தெரிவு செய்வது அனைத்து வருடங்களிலும் தகைமைகள் உள்ள மொத்த விண்ணப்பதாரிகளின் மொத்தத் தொகையில் அந்தந்த வருடத்திற்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளின் சதவீதத்தினாலாகும்.

2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்பயிற்சிக்கு விண்ணப்பிப்பதாயின் இங்கு கடைசியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் ஒரு விருப்பத் தெரிவிற்கு தயாரித்து அந்தந்த பயிற்சிக்காக தங்களது விருப்பத்தை ஒன்றிலிருந்து தொடர் இலக்கத்தில் குறிப்பிடல் வேண்டும். அந்த விருப்பத்தின் அடிப்படையில் பயிற்சி வழங்குவதற்கு முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் முதலாவது தெரிவு செய்யப்படும் பயிற்சிக்கு இணைய வேண்டும் என்பதுடன் அவருக்கு அடுத்து பயிற்சி நெறிக்கு இணைந்துகொள்வதற்கு அல்லது வேறு பயிற்சி நெறிக்கு மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

3. இது ஒரு முழுநேரப் பயிற்சிநெறி என்பதால் வார நாட்கள் ஐந்துடன் சனிக்கிழமை காலை நேரத்தில் பல்கலைக்கழகம் அல்லது சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு அரசாங்கத் தாபனங்களில் அல்லது வேறு எந்த முழு நேரப் பயிற்சி நெறியில் உள்ள மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது. யாராவது அவ்வாறு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அது வெளிப்படுத்துமிடத்து பயிற்சிநெறி/ பதவியிலிருந்து நீக்கப்பட்டு அதுவரை அரசாங்கத்தால் அவருக்காகச் செலவு செய்த அனைத்து செலவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும் பல்கலைக்கழகத்தில் முழு நேரப் பயிற்சிநெறியில் உள்ள ஒருவர் இதற்கு விண்ணப்பிப்பாராயின் அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் செயற்பட வேண்டும். சுகாதார அமைச்சின் கீழ் முழு நேரப் பயிற்சி நெறியில் பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

3.1 எந்தத் தினத்திலாவது நீங்கள் எந்தவொரு பல்கலைக்கழகத்தில் அல்லது அரச தாபனத்தில் முழு நேரப் பயிற்சி நெறிக்கு பதிவு செய்திருப்பின் ஆட்சேர்ப்பு நடைபெறும் திகதியின் போது அதை இரத்துச் செய்தல் வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டு விரிவுரைகளுக்குச் செல்லாது இருப்பினும் நீங்கள் பல்கலைக்கழக மாணவராகவே கருதப்படுவீர்கள் என்பதால் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் தமது பெயரை பதவியிலிருந்து நீக்கிக்கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதி செய்வதற்கும் போதுமான ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

3.2 நீங்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பின் அந்தப் பட்டம் செல்லுபடியாகும் திகதி (Effective Date) பாடநெறிக்கு இணைத்துக் கொள்ளும் திகதிக்கு முந்தியதாக இருக்க வேண்டும்.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை :**

* மேற்குறிப்பிட்ட 3.1 இலிருந்து 3.3 வரையுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் பயிற்சி நெறிக்காக இணைத்துக் கொள்ளப்படுகின்றீர்களென இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை நீங்கள் ஞாகபத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

* அந்த 3.1 இலிருந்து 3.2 வரையிலான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருப்பினும் உங்கள் தகைமைகள் போதியளவு இல்லாமை அல்லது இங்கு குறிப்பிட்டுள்ள வேறு நிபந்தனைகள் பூரணமில்லாதிருப்பின் எக்காரணங்கொண்டும் இப்பயிற்சி நெறிக்கு நீங்கள் தகைமையற்றவரென நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

* அதே போன்று நீங்கள் போதியளவு Z புள்ளிகளைப் பெற்று மற்றைய அனைத்து நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தவராகவும் 3.1 இலிருந்து 3.2 வரையுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யாதவராக இருப்பின் நீங்கள் எக்காரணங் கொண்டும் இப்பயிற்சி நெறிக்கு தகைமையற்றவரென நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

**4. கல்வித் தகைமைகளும் பதவிக்குத் தேவையான வேறு தகைமைகளும் :**

| இல. | பயிற்சி நெறி | க.பொ.த.(சா.த.) பெறுபேறு | க.பொ.த. (உ.த.) பெறுபேறு | பயிற்சிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 2 | மருந்தாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 3 | பௌதிக சிகிச்சை யாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 4 | தொழில்சார் சிகிச்சையாளர்கள் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 5 | கதிரியக்கவிய லாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 6 | பொது சுகாதாரப் பரிசோதகர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் அல்லது இணைந்த கணிதம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | * ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்<br>* உயரம் 5 அடி 2 அங்குலம் அல்லது அதற்கு மேல் |

| இல. | பயிற்சி நெறி | க.பொ.த.(சா.த.) பெறுபேறு | க.பொ.த. (உ.த.) பெறுபேறு | பயிற்சிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 7 | ஈ. சீ. ஜீ. தொழில் நுட்பவியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியலில் திறமைச் சித்தி யுடன் பௌதிகவியல், இரசா யனவியல் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 8 | ஈ. ஈ. ஜீ. தொழில் நுட்பவியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியலில் திறமைச் சித்தி யுடன் பௌதிகவியல், இரசா யனவியல் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 9 | கண் தொழில்நுட்ப வியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 10 | பல் தொழில்நுட்ப வியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 11 | பூச்சியியல் உதவி யாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியலில் திறமைச் சித்தி யுடன் பௌதிகவியல், இரசா யனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | * ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும் |
| 12 | பாடசாலை பல் சிகிச்சையாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியலில் திறமைச் சித்தி யுடன் பௌதிகவியல், இரசா யனவியல், விவசாய விஞ் ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | * பெண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்<br>* உயரம் 4 அடி 2 அங்குலமும் அதற்கு மேலும்<br>* விண்ணப்ப தாரர் விவாகம் ஆகாதவராக இருக்க வேண்டும் |

5. **ஏனைய தகைமைகள்**.- (அ) 28.04.2014 ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் தேவையான உயர்தர பரீட்சையின் தகைமையுடையவராகவும் இருக்க வேண்டும். (வருடம் தேவையற்றது).

(ஆ) பயிற்சியின் பின் நியமிக்கப்பட்ட மாகாணத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் சேவை செய்ய விருப்பம் தெரிவித்தல் வேண்டும்.

(இ) உடல், உள தகுதியுடன் சுக தேகியாகவும் இருக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் திகதிக்கு முன் மூன்று ஆண்டுகள் வசித்து வருபவராக இருக்க வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) இத்துடன் இணைக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்திற்கமைய விண்ணப்பப்பத்திரம் தயாரித்து (அதற்காக ஏ4 அளவு பத்திரத்தை உபயோகிக்கவும்) அவ் விண்ணப்பப்பத்திரத்தில் மாதிரி 1 இலிருந்து 10 (அ) வரை 1 ஆம் பக்கத்திலும் 10(ஆ) இலிருந்து 13 வரை 2 ஆம் பக்கத்திலும் வரும் வகையிலும் தயாரித்தல் வேண்டும். பயிற்சி நெறிகள் இரண்டு அல்லது பலவற்றிற்கு விண்ணப்பிப்பவராயின் அவ்வாறான விண்ணப்பதாரிகள் ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பந்தி இல. 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரித்த விருப்பு தெரிவுடன் தாம் கோரும் பயிற்சி நெறிகளின் குறியீட்டு இலக்கத்தை விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். (பயிற்சி நெறிக்குரிய குறியீட்டு இலக்கங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கும் வரிசையில் குறிப்பிடல் வேண்டும்.)

(ஆ) விண்ணப்பத்தில் "முத்திரை" என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் விண்ணப்பிக்கும் அனைத்து நெறிகளுக்குமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உரிய பெறுமதிக்குரிய முத்திரையை கழராதவாறு ஒட்டி தமது கையொப்பத்தை அதன்மேல் இடுவதன் மூலம் அதை இரத்துச் செய்தல் வேண்டும். நீங்கள் விண்ணப்பிக்கும் அனைத்து பயிற்சி நெறிகளுக்கும் முத்திரை ஒட்டுதல் கட்டாயமானதாகும்.

| | | |
|---|---|---|
| பாடநெறி 1 இற்காக | - | ரூபா 300 |
| பாடநெறி 2 இற்காக | - | ரூபா 500 |
| பாடநெறி 3 இற்காக | - | ரூபா 800 |
| பாடநெறி 4 இற்காக | - | ரூபா 1,100 |
| பாடநெறி 5 அல்லது அதற்கு மேல் | - | ரூபா 1,400 |

(இ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/கல்விச் சேவை/அரச கணக்காளர் சேவை/அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 2,40,360 ரூபா இற்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகியவர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஒரு விருப்பம் தெரிவித்து இணைத்துள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மருத்துவ விடயங்களுக்காக நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் சேவை மற்றும் துணை மருத்துவ சேவை பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு - 2014" மற்றும் அதற்குக் கீழே நீங்கள் விண்ணப்பிக்கும் மாகாணம் மற்றும் மாவட்டம் என்பன குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 2014.04.28 ஆந் திகதிக்கு முன் பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவம்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.

7. அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த தாபனங்களில் சேவை செய்வோர் தமது விண்ணப்பங்களை அவர்களது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். மேலும் இது வெளியில் இருந்து இணைத்துக்கொள்ளல் என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது.

9. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவை அடங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. மேற்குறிப்பிட்ட தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளில் Z புள்ளிகளின்படி தயாரிக்கப்படும் முதன்மைப் புள்ளிகளின் ஆவணத்தினூடாகத் தெரிவுசெய்யப்படுபவர்கள் மாத்திரம் சுகாதார அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் அடங்கிய நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். கீழே குறிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி Z - புள்ளிகள் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ் (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.) ;

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி ;

(ஈ) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம் (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.)

(உ) மேலே 5(ஈ) இற்கு அமைய கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவிடப் பதிவானது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) தான் திருமணமாகாதவர் என்பதை நிரூபிக்க சமாதான நீதவான் ஒருவரின் முன்னிலையில் கையொப்பமிட்ட சான்றிதழ் ஒன்று சமர்ப்பிக்க வேண்டும்.

12. **பயிற்சித் திட்டம்**.- (i) தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் பயிற்சிநெறிக்காக அந்தந்த பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவர். பயிற்சியாளர்களுக்கு சிங்களம்/தமிழ் மொழி மூலம் பயிற்சிகள் வழங்கப்படும்.

(ii) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலையின் நடைமுறையிலிருக்கும் சட்ட விதிகளுக்கும் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(iii) பயிற்சிக் காலத்தினுள் நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் அல்லது செயற்பாடுகள், நடத்தைகளில் அதிருப்தி கண்டறியப்படும் அல்லது பயிற்சிப் பாடசாலை விதிமுறைகளைப் பின்பற்றத் தவறும் பயிற்சியாளர்கள் இப்பயிற்சிக் காலத்தின் எச்சந்தர்ப்பத்திலும் எதுவித நஷ்டஈடுகளும் வழங்கப்படாமல் விலக்கப்படுவர்.

(iv) இப்பயிற்சிக் காலத்தின்போது பயிலுனர்களுக்கு மாதாந்தம் 12,360 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும்.

(v) பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும்போது பயிலுனரானவர், பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதாகவும் பயிற்சியின்போது அதனை விட்டு விலக மாட்டேன் எனவும், பயிற்சியின் பின் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் ஆகக்குறைந்தது 10 வருடங்கள் உரிய மாகாணத்தில் உரிய பதவியில் சேவையாற்றுவேன் எனவும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது பயிற்சியில் தொடர முடியாவிடின் அல்லது மேற்குறிப்பிட்ட iii இன் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து ஆண்டுகள் (10) காலத்தில் சுகாதார அமைச்சின் உரிய பதவியில் சேவை செய்வதற்கு முடியாது போகுமிடத்தில் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் பயிலுனர் மீள செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப்பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

13. **சேவைக்கு நியமிக்கும் விதிகள்**.- பயிற்சியின் இறுதியில் நிரந்தர நியமனம் செய்தல் அரசாங்கத்தின் கட்டாயமல்ல. ஆனாலும் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பாடநெறிக்குரிய ஆட்சேர்ப்பு சட்டதிட்டங்களுக்கு மற்றும் மாகாணத்திலுள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் உரிய பதவி III ஆம் வகுப்பிற்கு நியமிப்பது தொடர்பில் கவனம் எடுக்கப்படும். முதல் நியமனத் திகதியில் இருந்து 10 வருடத்திற்கு முதல் நியமனம் வழங்கப்பட்ட மாகாணத்தில் சேவை செய்வது கட்டாயமாகும்.

பயிற்சிநெறி முடிவில் நடத்தப்படும் இறுதி எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் மூலம் தயாரிக்கப்படும் செயற்பாட்டு நிரல் அடிப்படையில் மாகாண மட்டத்தில் 70% ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் நாடு முழுவதிலுமிருந்து திறமை அடிப்படையில் 30% ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை கருத்திற்கொண்டு வெற்றிடங்கள் உள்ள இடங்களில் நியமனங்கள் வழங்கப்படும்.

14. விண்ணப்பங்களை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பவும். பயிற்சிகளின்போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின் பயிற்சியிலிருந்து, சேவையிலிருந்து இடைநிறுத்தப்படவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் பெயரைச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் பயிற்சிக் காலத்தில் தங்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங்கள், பிணைக்கான நிதி என்பவை செலுத்த வேண்டும். இல்லையேல் அதனைப் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

15. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுனர்கள் பயிற்சிக் காலத்தின் 1 ஆவது மாதத்தில் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையினை மேற்கொள்ளக்கூடியதாக தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்கான மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர் பயிற்சியைத் தொடர்தல் நிராகரிக்கப்படும்.

16. மேற்கூறப்பட்டபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் அரச சேவைக்கான அனைத்து சட்டங்களிற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கு ஏற்பவும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக்காலம் ஏற்படுத்தும் அரச சட்ட ஒழுங்கு மாற்றங்களுக்குக் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் ஏதாவது வசனப் பிழை ஏற்படின் சிங்கள மொழியில் உள்ளதே சரியானது எனக் கவனத்தில் எடுக்கப்படும்.

18. பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குவதற்கான வசதி அமைச்சினால் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு வழங்கப்படின் அதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இட வாடகை மற்றும் நீர், மின் கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

19. இப்பயிற்சிக் காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தனிப்பட்ட வேலைகளில் ஈடுபடுவதற்கு உரிமை இல்லை. அவ்வாறு பயிற்சியின் பின் நீங்கள் உரிய பதவிக்கு நியமிக்கப்படின் அதன்பின் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கும் உரிமை இல்லை. அவ்வாறு ஈடுபட்டால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

வைத்தியர் வை. டி. நிஹால் ஜயதிலக்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.

**பயிற்சி நெறிக்கான விருப்பத்தைத் தெரிவித்தல்**

| பயிற்சிநெறி இல. | பயிற்சிநெறியின் பெயர் | விருப்பு |
|---|---|---|
| 1 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | |
| 2 | மருந்தாளர் | |
| 3 | பௌதிக சிகிச்சையாளர் | |
| 4 | தொழில்சார் சிகிச்சையாளர் | |
| 5 | கதிரியக்கவியலாளர் | |
| 6 | பொது சுகாதார பரிசோதகர் | |
| 7 | ஈ. சீ. ஜீ. தொழில்நுட்பவியலாளர் | |
| 8 | ஈ. ஈ. ஜீ. தொழில்நுட்பவியலாளர் | |
| 9 | கண் தொழில்நுட்பவியலாளர் | |
| 10 | பல் தொழில்நுட்பவியலாளர் | |
| 11 | பூச்சியியல் உதவியாளர் | |
| 12 | பாடசாலை பல் சிகிச்சையாளர் | |

ஒவ்வொரு பயிற்சிநெறி காரணமாக எனது விருப்பத்தை மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணையின் மூலம் தெரிவிக்கிறேன் என்றும், இதைத் தவிர வேறு ஒரு விருப்பு தெரிவிப்பையும் வழங்கவில்லை என்றும் இதை மாற்றிக்கொள்ள முடியாதென்றும் விருப்பத்திற்கிணங்க தெரிவுசெய்யுமிடத்தோ அல்லது அமைச்சினால் தெரிவுசெய்யப்படும் பயிற்சி நெறிக்கோ நான் செல்ல வேண்டுமென்பதையும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட சட்டதிட்டங்களை நன்கு வாசித்து அறிந்துள்ளேன் என்றும் இத்தால் உறுதிமொழி கூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேசிய அடையாள அட்டை இல. :----.
திகதி :----.

**சமாதான நீதவானின் உறுதிப்படுத்தல்.**- இவ்விருப்புப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ............................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும் என் முன்னால் அவர் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
சமாதான நீதவானின் கையொப்பம்.

சமாதான நீதவானின் முழுப்பெயர் :----.
விலாசம் :----.
சமாதான நீதவானின் அலுவலக முத்திரை :----.
திகதி :----.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சு**

*மருத்துவ விடயங்களுக்காக நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்வல்லுனர்கள் சேவை மற்றும் துணை மருத்துவ சேவை பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு - 2014*

விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.

* விண்ணப்பிக்கும் பாடநெறியின் இலக்கம் : | | | | | | | | | | | |

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல்எழுத்துக்களில், உ+ம் A. B. C. SILVA)
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | (பிரதியை இணைக்கவும்)

3. தபால் முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ........................... | ........................... |
| ........................... | ........................... |
| ........................... | ........................... |
| ........................... | ........................... |

4. (அ) நிரந்தர முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ........................... | ........................... |
| ........................... | ........................... |
| ........................... | ........................... |
| ........................... | ........................... |

(ஆ) தொலைபேசி இலக்கம் (கையடக்க) : | | | | | | | | | | |

நிலையான : | | | | | | | | | | |

(இ) வசிக்கும் மாவட்டம் (சிங்களத்தில்/தமிழில்) :----.
ஆங்கிலத்தில் :----.

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா ? ஆம்/இல்லை :----.

(உ) ஆம் எனில் எப்போதிலிருந்து :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

2014.04.28 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

6. உயரம் :

................. அடி .................. அங்குலங்கள்

7. பால் : ஆண் | | பெண் | |

8. இலங்கைப் பிரசையா ? ஆம் | | இல்லை | |

9. விவாக நிலைமை :

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

10. கல்வித் தகைமைகள் :-

(அ) க. பொ. த. (உ. த.) பரீட்சை (Z புள்ளியுடனான பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதிசெய்த பிரதியை இணைக்கவும்) :----.
பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டம் :----.
ஆண்டு :----.சுட்டெண் :----.
Z புள்ளி :----.

| | பாடம் | சித்தி |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

க. பொ. த. (சா. த.) பரீட்சை பெறுபேற்றுப் பத்திரம் (உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுப் பத்திரத்தை இணைக்கவும்.) :

| | பாடம் | முதலாம் அமர்வு<br>வருடம் :<br>சுட்டெண் : | இரண்டாம் அமர்வு<br>வருடம் :<br>சுட்டெண் : |
|---|---|---|---|
| 1. | சிங்கள மொழி/தமிழ் மொழி | | |
| 2. | கணிதம் | | |
| 3. | விஞ்ஞானம் | | |
| 4. | ஆங்கிலம் | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |
| 11. | | | |
| 12. | | | |

நீங்கள் க. பொ. த. (சா. தரம்) பரீட்சைக்காகத் தோற்றிய சகல பாடங்களும் இவ்வட்டவணையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

11. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? :----.
(பொருத்தமான கூட்டில் " ✓ " குறியிடுக.)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில், தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :----.

12. (அ) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நன்கு வாசித்தும் அதிலுள்ள நிபந்தனைகளை நன்கு அறிந்தும் என்னால் இவ்விண்ணப்பப்பத்திரம் நிரப்பப்பட்டதென்றும் நான் எந்தவொரு முழுநேர பாடநெறியில் ஈடுபடவில்லை என்றும் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மையானவை எனவும்,

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நான் நன்கறிவேன்.

உங்களால் விண்ணப்பிக்கப்படும் ஒரு பாடநெறிக்கு/பாடநெறிகளுக்கு வர்த்தமானி அறிவித்தலில் 6(ஆ) இல் குறிப்பிட்ட பெறுமதிக்கு செல்லுபடியாகும் முத்திரையை கழராதவாறு ஒட்டவும்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி .................................................................. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................ ஆந் திகதி இடப்பட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்).

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

3-876

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி-2 இன் சேவைப் பிரிவில் பதவி வெற்றிடங்களுக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பு செய்தல் - 2013**

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்காக தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்ப சேவைப் பிரிவிற்கு ஏற்புடைய தகைமைகளைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் நிரந்தர நியமனங்களைக் கொண்டிருக்க வேண்டியதோடு, அந்த நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கவும் வேண்டும் :

| | ஆட்சேர்ப்பு செய்யப்படும் பதவி | வெற்றிட எண்ணிக்கை | விண்ணப்பிக்க முடியுமான திணைக்களத்தின் ஆரம்ப சேவைத் தொகைக்குரிய பதவிகள் |
|---|---|---|---|
| 1 | வளாக மேற்பார்வையாளர் | 07 | மேசன், தச்சர், மின் தொழில்நுட்பவியலாளர் |
| 2 | வேலைத்தள உதவியாளர் | 11 | மின் தொழில்நுட்பவியலாளர் ஓட்டுனர், இயந்திர நிபுணர், மேசன், தச்சர் |

1.**ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். முதலாவதாக எழுத்துப் பரீட்சை நடைபெறுவதோடு, அந்த பரீட்சையில் திறமை மற்றும் உயர் புள்ளிகளுடன் சித்தியடையும் அடிப்படையில் விண்ணப்பதாரர்களிடையே இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு குறித்த பதவியின் III ஆம் தரத்தில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

(i) **எழுத்துப் பரீட்சை :**

| வினாப்பத்திரம் | காலம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தி அடைவதற்கான புள்ளித் தொகை |
|---|---|---|---|
| பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தை பரீட்சித்தல் | 1 மணித்தியாலம் | 100% | 40% |

(ii) **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படுவதற்கான பிரதான தலைப்புக்கள் | வழங்கப்படும் அதிகூடிய புள்ளித்தொகை |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில் தகைமைகள் | 35 |
| மேலதிக அனுபவம் | 30 |
| மொழித் தேர்ச்சி | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

2. **கல்வித் தகைமைகள்**.- மொழி மற்றும் கணிதம் உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு இரண்டு திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

3. **ஒவ்வொரு பதவிக்குமுரிய தொழில்சார் தகைமைகள்** :

(அ) வளாக மேற்பார்வையாளர்.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் நிர்மாணத்துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) 4 ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல் ;

(ஆ) வேலைத்தள உதவியாளர்.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் இயந்திரவியல்/சிவில் துறை தொடர்பாக தேசிய தொழில் தகைமை (NVQ) 4 ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல் ;

4. **சேவை அனுபவம்**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்துக்கு உரித்தான மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பிக்க முடியுமான திணைக்களப் பதவி ஒன்றில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருப்பதோடு, 5 ஆண்டுகள் தொடரான, திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்தமை தொடர்பில் திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியிருப்பின் அல்லது ஏதேனும் ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கும் பொருட்டு நிபந்தனைகளுடன் சேவையாற்றிய பயிற்சிக் காலப்பகுதியில் அல்லது ஏதேனும் ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/அமைய/உதவிச் சேவைக் காலப்பகுதியில் இந்த தகைமைகள் பெறவேண்டிய ஐந்து வருட காலப்பகுதி தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

5. **வயதெல்லை**.- பொருத்தமில்லை.

6. **சம்பளம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (IV) இற்கு அமைய இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீட்டு இலக்கம் : MN-1-2006 (A) சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூபா 22,040 உரித்தாகும்.

7. மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் சகலரும் சிறந்த இயல்பையும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்**.- (i) இங்கு கீழே குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப, ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்த விண்ணப்பப்படிவங்களை தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்திசெய்து "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இலக்கம் 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2014.04.28 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "...................................................... (குறித்த பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.) பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தை தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தனித்தனியாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

(iv) இப்பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) ஒரு பதவிக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 100 ஆக இருப்பதோடு, ஒவ்வொரு பதவிக்காகவும் வேறுவேறாக பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். குறித்த கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேரில் மத்திய வங்கி, மத்திய நகரக் கிளையின் இலக்கம் 176-100-139026228 எனும் வங்கிக் கணக்கிலக்கத்திற்கு நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கிக் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய பகுதியில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதோடு, காசுக்கட்டளை மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(vi) சகல விண்ணப்பதாரர்களும் தமது கையொப்பத்தை தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளரின் அல்லது அதிபரின் அல்லது பதிவாளரின் மூலம் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(vii) விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டையை அனுப்பும் பொருட்டு விண்ணப்பதாரரின் முகவரியை உள்ளடக்கிய ரூபா 30 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 23 செ. மீ. x 10 செ. மீ. அளவுள்ள கடித உறையையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(viii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரர்களின் அபேட்சகத் தன்மை இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான தகவல்கள் ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவருமிடத்து சேவையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ix) திணைக்களத்திலுள்ள எவருடைய பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக் கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாக கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. அதேவேளை, விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றியும் அறியத்தரப்படமாட்டாது.

9. **அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கல்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் : 07/2007 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப குறித்த மட்டத்தில் ஏனைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியை சேவையில் இணைந்த ஐந்து (5) வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. **பரீட்சை ஒழுங்குவிதிகள்.**- (i) ஒழுங்கான முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்து செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்த கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல விடயங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரி தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காக-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ; அல்லது
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழி ஆகிய இரு மொழிமூலத்தில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்களை கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளுக்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி குறித்த தினத்திற்கோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் சந்தர்ப்பம் வழங்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது, தகைமைகள் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது பரீட்சை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பின் பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும்.

11. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.**- (i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை/அநாதை/தாரமிழந்தவர் அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தா செலுத்துதல் வேண்டும்.

(ii) குறிப்பிடப்படுவதற்கு அமைய இந்த திணைக்களத்திற்கு உட்பட்ட எந்தவொரு தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள், பதவிகளுக்கு உரித்தான ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் அரசின் அல்லது பொறுப்பான அமைச்சின் அல்லது தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளரினால் வெளியிடப்படும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1589/30 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை ஏற்பாடுகளுடன் தொடர்பான பொது நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கும் பொருத்தமானதாகும்.

12. நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் பூரணப்படுத்துவதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

எஸ். பாலசுப்பிரமணியம்,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
2014, மாச்சு 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி 2 இன் சேவைப் பிரிவில் ........................................... பதவி வெற்றிங்களுக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பு செய்தல் - 2013**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2

1. விண்ணப்பதாரரின் பெயர் :-

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : SILVA, A.B.C.

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :-

(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) தனிப்பட்ட முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
செல்லிட தொலைபேசி இலக்கம் :----.

(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :-

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :----.
(திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன)

8. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
வருடம் ---- சுட்டிலக்கம் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை :
வருடம் ---- சுட்டிலக்கம் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்கத் துறை/இடைநிலை அரசாங்கத் துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களில் சித்தியடைந்த உயர் பரீட்சை :
சிங்களம் :----.
தமிழ் :----.
ஆங்கிலம் :----.

12. நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா/பதிவுசெய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும் :----.

(பதிவு செய்ததன் மூலம் எனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

13. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :----.

பணம் செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இணைத்து அனுப்புதல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவந்தால் எனக்கு எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தில் சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி .................................................. அவர்கள் ........................................... எனும் பதவியில் தற்போது பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும், அந்தப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

3-931/1

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி 2 இன் சேவைப் பிரிவில் பதவி வெற்றிடங்களுக்காக (திறந்த) ஆட்சேர்ப்பு செய்தல் - 2013

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்காக உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | ஆட்சேர்ப்பு செய்யப்படும் பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வளாக மேற்பார்வையாளர் | 17 |
| 2 | வேலைத்தள உதவியாளர் | 27 |

1. **ஆட்சேர்ப்பு முறை.**- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றில் பெற்றுக்கொள்ளப்படும் பெறுபேறுகள் மற்றும் திறமை அடிப்படையில் குறித்த பதவியின் III ஆம் தரத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(i) **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படுவதற்கான பிரதான தலைப்புக்கள் | வழங்கப்படும் அதிகூடிய புள்ளித்தொகை |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில் தகைமைகள் | 35 |
| மேலதிக அனுபவம் | 30 |
| மொழித் தேர்ச்சி | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

*2. **கல்வித் தகைமைகள்**.- (1) கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.*

*அத்துடன்*

*(2) கல்விப் பொதுத் தராதர (உ. த.) பரீட்சையில் குறைந்தது ஒரு (01) பாடமாவது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.*

*3. ஒவ்வொரு பதவிக்கும் உரித்தான கல்வித் தகைமைகள் மற்றும் கடமையின் பொறுப்புக்கள் :*

*(அ) **வளாக மேற்பார்வையாளர்**.-* (I) *தொழில்சார் தகைமைகள் :*

(i) *கைத்தொழில் தொழில்நுட்பவியல் தொடர்பான தேசிய (சிவில் பொறியியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் ;*

*அல்லது*

(ii) *கட்டட நிர்மாண தொழில்நுட்ப நிபுணத்துவத்தில் தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல் ;*

*அல்லது*

(iii) *மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் நிர்மாணத் துறையில் தேசிய தொழில் தகைமை முழுநேர* (NVQ) *4 ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.*

(II) *கடமை இயல்புகள் :*

(i) *கல்லூரிகளில் பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத சேவைத் தொகுதியின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடல் ;*
(ii) *கல்லூரி வளாகத்தில் கட்டடங்கள், நிலங்களைப் பராமரிக்கும் நடவடிக்கை ஒழுங்குகளை மேற்கொள்ளல் மற்றும் மேற்பார்வை செய்தல் ;*
(iii) *உற்பத்தி மற்றும் சேவைத் தொகுதியின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளல் ;*
(iv) *நிறுவனத் தலைவரினால் வழங்கப்படும் பதவிக்குரித்தான ஏனைய கடமைகள்.*

*(ஆ) **வேலைத்தள உதவியாளர்**.-* (I) *தொழில்சார் தகைமைகள்.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் இயந்திர/சிவில் துறையில் தேசிய தொழில் தகைமை முழுநேர* (NVQ) *4 ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.*

(II) ***கடமை இயல்புகள்** :*

(i) *தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரிகளின் வேலைத்தள இருப்புப் புத்தகங்களை* (inventory) *பரீட்சித்தல் மற்றும் அறிக்கையிடல் ;*
(ii) *வேலைத்தளங்களில் நிலவுகின்ற குறைபாடுகள், மேலதிகமானவைகள் தொடர்பாக அறிக்கையிடல் ;*
(iii) *வேலைத்தளங்களில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக அறிக்கையிடல் ;*
(iv) *நிறுவனத் தலைவரினால் வழங்கப்படும் பதவிக்குரித்தான ஏனைய கடமைகள்.*

*4. **சேவை அனுபவம்**.- அரசாங்க அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த துறையில் (01) ஒரு வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.*

*5. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*6. **சம்பளம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006* (IV) *இற்கு அமைய இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீட்டு இலக்கம் :* MN-1-2006 (A) *சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூபா 22,040 உரித்தாகும்.*

*7. மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் சகலரும் சிறந்த இயல்பையும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.*

8. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்.**- (i) 2014.04.28 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இலக்கம் 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மாதிரி ஒன்று இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ஏ4 தாளைப் பயன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "...................................................... (குறித்த பதவியை குறிப்பிடல் வேண்டும்.) பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாக குறிப்பிடல் வேண்டும் ;

(iv) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரி ஒருவர் அல்லது 22,935 ரூபாவை திரட்டிய மாதாந்த சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் அதிகாரி மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும் ;

(vi) இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றியும் அறியத்தரப்படமாட்டாது. உரிய தகைமைகள் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

9. **போலியான தகவல்கள் வழங்கல்.**- விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. **அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கல்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் : 07/2007 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப குறித்த மட்டத்தில் ஏனைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியை சேவையில் இணைந்த ஐந்து (5) வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

11. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.**- (i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை/அநாதை/தாரமிழந்தவர் அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தா செலுத்துதல் வேண்டும்.

(ii) குறிப்பிடப்படுவதற்கு அமைய இந்த திணைக்களத்திற்கு உட்பட்ட எந்தவொரு தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள், பதவிகளுக்கு உரித்தான ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் அரசினால் அல்லது பொறுப்பான அமைச்சினால் அல்லது தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளரினால் வெளியிடப்படும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1589/30 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை ஏற்பாடுகளுடன் தொடர்பான பொது நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளும் பொருத்தமானதாகும்.

12. நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் பூரணப்படுத்துவதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

எஸ். பாலசுப்பிரமணியம்,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
2014, மாச்சு 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி - 2 இன் சேவைப் பிரிவில் ............................................ பதவி வெற்றிடங்களுக்காக (திறந்த) ஆட்சேர்ப்பு செய்தல் - 2013**

1. விண்ணப்பதாரரின் பெயர் :-

    (i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

    (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

    (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :-

    (i) அலுவலக முகவரி :----.
    தொலைபேசி இலக்கம் :----.

    (ii) தனிப்பட்ட முகவரி :----.
    தொலைபேசி இலக்கம் :----.
    செல்லிட தொலைபேசி இலக்கம் :----.

    (முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :-

    ஆண்டு :---- மாதம் :---- திகதி :----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

    வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :----.
    (திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன)

8. கல்வித் தகைமைகள் :

    க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
    வருடம் ---- பரீட்சை சுட்டெண் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

8. க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை :
வருடம் ---- பரீட்சை சுட்டெண் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்கத் துறை/இடைநிலை அரசாங்கத் துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. கீழே குறிப்பிடப்படும் விடயங்களில் சித்தியடைந்த உயர் பரீட்சை :
சிங்களம் :----.
தமிழ் :----.
ஆங்கிலம் :----.

12. (i) நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா/பதிவு செய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும் :----.

(பதிவு செய்ததன் மூலம் எனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

(ii) இனம் (அடைப்பினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்) : ☐

(சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இலங்கை முஸ்லிம்-3, இந்திய வம்சாவளி-4, வேறு-5)

13. நீர் அரசாங்க பதவி ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவரா ? :----.

14. தற்போது அரசாங்க சேவையில் உள்ளீர் எனில் உமக்கு எதிராக திணைக்களம் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதா ? :----.

15. நீர் ஏதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரத்தைக் குறிப்பிடவும் :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர்

தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் ஒப்பம் :

திரு./ திருமதி/ செல்வி ............................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ........................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி .................................................. ....................................................... அவர்கள் .................................................................... எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

3-931/ 2

---

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

கணக்காய்வு பரீட்சகர் சேவையின் கணக்காய்வு பரீட்சகர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு 06(ii)(ஆ) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அச்சேவையின் II ஆம் தரத்திற்கான ஆட்களைத் தெரிவுசெய்வதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் ஒரு திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் இந்த அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பரீட்சைத் திகதி.**- 2014, யூலை மாதத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் இந்தப் பரீட்சை நடாத்தப்படும். இந்த பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ கணக்காய்வாளர் தலைமை அதிபதி அதிகாரங்களைக் கொண்டுள்ளார். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது.

2. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கையும் நியமனம் அமுலாகும் திகதியும்.**- நியமனம் அமுலாகும் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தீர்மானிக்கப்படும். குறித்த சில எண்ணிக்கையான வெற்றிடங்களையோ அல்லது சகல வெற்றிடங்களையுமோ நிரப்பாது விடுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரமுள்ளது.

3. **சேவை நிபந்தனைகள் :**

(i) அரசாங்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1985, திசெம்பர் 20 ஆந் திகதிய 380/ 61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப் பட்ட நிபந்தனைகள் மற்றும் அந்த குறிப்பிற்கு செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள ஏதாவது திருத்தங்கள் என்பவற்றுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட

பரீட்சார்த்திகள் கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II இற்கு நியமனம் செய்யப்படுவர்.

(ii) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். நீங்கள் நியமனம் பெற்ற திகதியிலிருந்து மாதாந்த உழைப்பின் ஏழு சதவீதம் (7%) விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்துவதற்கு நீங்கள் வேண்டப்படுவீர்கள்.

(iii) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கொண்ட காலப்பகுதிக்கு தகுதிகாண் சேவைக்கு உட்பட்டு சேவையில் நியமிக்கப்படுவர்.

(iv) பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் அபேட்சகர்கள் அவர்களது தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுதல் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது :-

(அ) கடமைகள், வருகை மற்றும் நடத்தைகள் திருப்திகரமாக இருத்தல் ;

(ஆ) தகுதிகாண் காலப்பகுதி முடிவடைவதற்கு முன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல்.

(v) தகுதிகாண் காலப்பகுதியின் இறுதியில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு தவறுமிடத்து அவருடைய சேவை முடிவிற்குக் கொண்டுவரப்படும்.

(vi) பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஐந்து (05) ஆண்டுகளுக்குள் 2007, மே 30 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கரும மொழியில் நிபுணத்துவத்தினை பெற்றுக்கொள்தல் வேண்டும்.

(vii) தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றும் நிபந்தனைக்கு உட்படுவர்.

(viii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஒழுங்குவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற விதிகள் மற்றும் பிரமாணங்கள் அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் பணிப்புரைகளுக்கும் இப்பதவி கடப்பாடுடையதாகும்.

**4. சம்பள அளவுத் திட்டம்**.- கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II தொடர்பான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 06/2006 (iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 16,720 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 ரூபா 30,685 ஆகும். (ரூபா 17,680 இற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுள்ளது.)

**5. சுகாதாரமும் ஒழுக்கமும்**.- பரீட்சார்த்தி நல்ல உடலாரோக்கியமும் சிறந்த ஒழுக்கப் பண்பும் உடையவரென்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி திருப்தியடைதல் வேண்டும். பரீட்சார்த்தி நல்ல தேகாரோக்கியத்தினையும் சிறந்த கண் பார்வையினையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் தீவின் எந்த பாகத்திலும் சேவையாற்றுவதற்கான உடலியல் தகைமையினைக் கொண்டிருத்தலும் வேண்டும். தற்போதைக்கு அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் இல்லாத பரீட்சார்த்தி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால் அவர் ஒரு மருத்துவ பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும்.

**6. தகைமைகள்**.- எல்லா பரீட்சார்த்திகளும்,

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதியில், அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் இல்லாத விண்ணப்பதாரிகள் 22 வயதிற்கு குறையாதவராகவும் 32 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் 40 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும் ;

(இ) பரீட்சார்த்தி சிறந்த ஒழுக்கப் பண்பும் நல்ல உடலாரோக்கியமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக அல்லது இதற்கு ஒப்பான தகைமையைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் தராதரப்பத்திர ("லைசன்சியேட்") அல்லது இடைமட்ட ("இன்டமீடியட்") பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

(iii) இலங்கை தொழில்நுட்ப கல்லூரி/இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் உயர் தேசிய கணக்கியல் அல்லது வணிக டிப்ளோமாவில் சித்திபெற்றிருத்தல்.

(உ) ஏதேனும் சமயப் பிரிவொன்றில் பதவியொன்றை வகிக்கும் எவரும் இப்பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவர் தகைமை உள்ளவர் எனக் கருதப்படுவது அவரால்,

(i) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையாகக் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையை அல்லது பரீட்சைகளை 2014, ஏப்பிறல் 25 ஆந் திகதியில் சகல விதத்திலும் வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி இருத்தல்,

அத்துடன்

(ii) தகைமைகளுக்கான உத்தியோகபூர்வ சான்றிதழ்கள் அல்லது அச்சான்றிதழ்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ ஆவணமொன்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தால் மாத்திரமேயாகும்.

**7. பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இதற்கான கட்டணம் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு

வைக்கப்படும் வகையில் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திதிக்கு முன்னர் நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச/மாவட்ட செயலகத்திற்கு செலுத்தப்பட்டு உங்களது பெயருக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும். இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் முழு அளவிலோ அல்லது பகுதியளவிலோ மீளச் செலுத்தப்பட மாட்டாது. (பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருப்பது உகந்ததாகும்).

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பம் இந்த அறிவுறுத்தலுடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ4 அளவுத்தாளில் தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்தி தனது சொந்தக் கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும். 1 முதல் 4 வரையான தலைப்புகள் முதலாம் பக்கத்திலும் 5 முதல் 6 வரை இரண்டாம் பக்கத்திலும் 7 முதல் 9 வரை மூன்றாம் பக்கத்திலும் 10 முதல் 12 வரையான தலைப்புகள் நான்காம் பக்கத்திலும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவுறாத விண்ணப்பங்கள் பூரணமற்ற தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை தன்வசம் வைத்திருத்தல் உகந்ததாகும்.

(ஆ) விண்ணப்பம் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்ற மொழியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். (12 ஆம் பந்தியைப் பார்க்க) விண்ணப்பத்தினை தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழிற்கு மேலாக ஆங்கிலத்திலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 2014, ஏப்பிறல் 25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பெறக்கூடிய வகையில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கணக்காய்வுப் பரீட்சகர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014" என்று தெளிவான எழுத்தில் எழுதப்பட வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பத்தை தமது திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விடயத்திலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பங்கள் தொலைந்துபோனமை அல்லது தாமதமடைந்துவிட்டமை போன்ற முறைப்பாடுகள் எதுவும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. மேலும், பரீட்சார்த்தி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவது அதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமையாக அமையாது. இவ்வாறு அனுமதிக்கப்படுவது தற்காலிகமானதாகவும் பின்னர் அவசியமான பரிசோதனைகளுக்கு உட்பட்டதுமாகும்.

(உ) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும், செய்திப்பத்திரிகைகளில் அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவித்தல் கொடுக்கப்படும். அறிவித்தல் வழங்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டவாறு அது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தினை பதிவுத்தபாலில் அனுப்புகையில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு என்பவற்றுடன் உங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரினை சரியாகக் குறிப்பிட்டு விண்ணப்பதாரிகளால் விசாரணை செய்தல் வேண்டும். நீங்கள் கொழும்பிற்கு வெளியேயுள்ள பிரதேசத்தினைச் சேர்ந்தவராயின் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்காக உங்களது தொலைநகல் இலக்கம் மற்றும் மேற்படி விபரங்களைக் குறிப்பிட்டு தொலைநகல் மூலம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிப்பது பயனுள்ளதாகும்.

(ஊ) பரீட்சை விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை அனுமதி அட்டையில் கையொப்பத்தினை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் விண்ணப்பதாரரின் கையொப்பம் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள் உரிய திணைக்களத் தலைவர்களால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், (ஆண்டிற்கு ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறும்) அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், பௌத்த விகாரை ஒன்றின் பிரதம குரு அல்லது உயர் ஸ்தானத்தில் உள்ள குரு, ஏனைய வேறு மதத்தைச் சார்ந்த வணக்க ஸ்தலத்துக்குப் பொறுப்பாக இருக்கும் அல்லது அத்தகைய வணக்க ஸ்தலங்களில் முக்கிய பதவி வகிக்கும் குரு, முப்படைகளில் ஆணைபெற்ற அலுவலர் ஒருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியில் உள்ள அலுவலர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும்.

9. **பரீட்சைக்கு அனுமதி**.- (அ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற ஒவ்வொருவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையொன்று அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஒவ்வொருவரும் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தோற்றுகின்ற முதலாம் நாளன்றே தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை மண்டபத் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்றே தமது அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்தி களாலும் பின்பற்றப்பட வேண்டிய விதிகளின் கோவையொன்று இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுதல், அவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் உண்டென ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படுதல் கூடாது.

(ஈ) பரீட்சைகள் நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிகளுடன் இணங்கி நடப்பதற்கு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுகின்றனர். இவ்விதிகளில் எவற்றையும் மீறுகின்ற பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அவரின் தற்றுணிபின் பேரில் தண்டனைக்கு ஆளாகலாம்.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்.**- பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தக் கட்டத்திலும் அவருடைய பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுள்ளது. பரீட்சார்த்தி ஒருவரால் தரப்பட்ட விபரங்கள் அவருடைய அறிவுக்கு எட்டியவரை பொய் எனக் காணப்பட்டால் அல்லது அவர் முக்கிய விடயமொன்றை வேண்டு மென்றே மறைத்துவிட்டார் எனக் காணப்பட்டால், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுள்ளது.

12. **பரீட்சை முறை.**- (அ) பரீட்சை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது ;

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர், அவர் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைபெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் ;

(இ) பரீட்சார்த்தி ஒருவர், அவர் தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளிலோ சித்தியடைந்திருப்பின் அவர் அப்பரீட்சையின் பெரும்பான்மையான பாடங்களில் எம்மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் ;

(ஈ) பிரதான பாடம் ஒரு மொழியிலும், துணைப் பாடங்களை இன்னொரு மொழியிலும் சித்தியடைந்துள்ள சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்தை எம்மொழியில் சித்தியடைந்தாரோ அம்மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழியை மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு.**- (i) மேலே (அ) மற்றும் (இ) இல் 'தகைமை பெற்ற' பரீட்சை என்ற சொற்றொடர் மேலே 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் ஒன்றாகும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையின் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

13. **பரிசோதிக்கும் முறை.**- (அ) பின்வரும் ஐந்து பாடங்களுக்காக நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும் :-

| | விடயம் | காலம் (மணித்தியாலம்) | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) | கணக்கியல் | 03 | 150 |
| (2) | கிரயக் கணக்கியல் | 02 | 100 |
| (3) | கணக்காய்வு | 03 | 150 |
| (4) | வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் | 02 | 100 |
| (5) | சுற்றாடல் : 1 ஆம் பகுதி - பொருளியல் | 01 | 50 |
| | 2 ஆம் பகுதி - பொது வர்த்தக அறிவு | 01 | 50 |
| | 3 ஆம் பகுதி - வர்த்தகச் சட்டம் | 01 | 50 |

எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்னிணைப்பு "அ" இல் தரப்பட்டுள்ளது.

(ஆ) எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக்குறைந்தது 40 சதவீத புள்ளிகளையும் மொத்தப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 50 சதவீத சராசரி புள்ளியையும் பெறும் பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு தோற்றத் தகுதி பெறுவதுடன் இப்பரீட்சைக்குப் பின்னர் அறிவிக்கப்பட்ட ஒரு திகதியில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். பரீட்சார்த்திகளின் கல்வித் தகைமைகள், சான்றிதழ்கள் மற்றும் சேவைப் பதிவேடுகளைப் பரீட்சிப்பதற்கு மாத்திரமே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக் குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்படும்.

14. **நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் நடைமுறை.**- எழுத்துப் பரீட்சையில் 5 வினாத்தாள்களுக்காகவும் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்படுவார்கள். பல பரீட்சார்த்திகள் ஒரே அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பின் தெரிவுசெய்வதற்கான இறுதித் தீர்மானம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் எடுக்கப்படும்.

15. 13(ஆ) பந்தியின் பிரகாரம் தகைமைபெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்றுப் பட்டோலை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளிற்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும்.

16. மேற்படி பிரமாணங்களில் மேவப்படாத விடயங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவே இறுதி முடிவாகும்.

17. இந்த அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளுக்கிடையே எவையேனும் இணக்கமின்மைகள் காணப்பட்டால் சிங்கள அறிவித்தலின் விடயங்களே மேலோங்கும்.

எச். ஏ. எஸ். சமரவீர,
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை,
2014, ஏப்பிறல் 25.

**பின்னிணைப்பு "அ"**

**எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம் :**

(i) ***கணக்கியல்.*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 3 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்) :

* *கணக்கியல் கோட்பாடு.*- அடிப்படை எடுகோள்கள் மற்றும் தத்துவங்கள், சொத்து மதிப்பீட்டு முறைமைகள், இரட்டைப் பதிவுக் கோட்பாடு, கிரயத்தின் வகைகள், ஐந்தொகையின் தகவல்களை வகைப்படுத்தல் மற்றும் உற்பத்தி வியாபார, இலாப நட்டக் கணக்குகள் என்பவற்றின் பொதுவான புரிந்துணர்வு.

* *கணக்கியல் நடைமுறை.*- ஒரு கணக்கீட்டு உரிமத்தில் பயன்படுத்தப்படும் வளங்களில் மாற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைக் கட்டுப்பாட்டுக் கோட்பாடு, நியமங்களுடன் ஒப்பிடுவதற்கான தேவை, வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் பகுப்பாய்வு, கொள்வனவு விற்பனை, பணத்தின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு, பதிவேட்டுப் பொருட் கட்டுப்பாடு முதலியவாறான அடிப்படை முகாமைத்துவ செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகளை நன்கு தெரிந்திருத்தல், கணக்கறிக்கைகள், நாட்பதிவுப் புத்தகங்கள், பேரேடுகள், கட்டுப்பாட்டுக் கணக்குகள் முதலியவற்றின் வித்தியாசமான வடிவமைப்புக்களைத் தெரிந்திருத்தல் என்பனவற்றின் புரிந்துணர்வு.

* ஐந்தொகை, உற்பத்தி, வியாபார இலாப நட்டக் கணக்குகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், கட்டுப்பாட்டுக் கணக்குகள் முதலியன, கணக்கீடு மற்றும் புள்ளிவிபர விகிதங்கள் என்பவற்றைத் தயாரிப்பது உட்பட கணக்கியல் நடைமுறைச் சிக்கல்கள்.

(ii) ***கிரயக் கணக்கியல்.*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 2 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (100 புள்ளிகள்) :

* கிரயவியல் தத்துவங்கள், கிரயவியல் வகைகள், கொள்வனவு மற்றும் களஞ்சிய நடைமுறை, பொருட்கள், பொருட்களை விலையிடல், பொருள் வழங்கலின் விலைகுறித்தல், கூலிகள், மேந்தலைகள், நிலையான மற்றும் மாறும் செலவுகள், நேர் மற்றும் நேரில் செலவுகள், பாதீட்டுக் கட்டுப்பாடு, நியமக் கிரயவியல், முரண்கள், எல்லைக் கிரயவியல், ஒப்பந்தக் கிரயவியல், செயல்முறை கிரயவியல், துண்டு வேலைக் கிரயவியல், போக்குவரத்துக் கிரயவியல், வெளியீட்டுக் கிரயவியல் என்பவற்றின் கொள்கைகள்.

(iii) ***கணக்காய்வு.*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 3 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்) :

* *கணக்காய்வு எண்ணக் கருக்களும் கோட்பாடுகளும்.*- கணக்காய்விற்கான தேவை, கணக்காய்வினை அடிப்படையான கணக்குகளின் தகைமை, கணக்காய்வின் நோக்கெல்லை, கணக்காய்வு வகைகள், கணக்காய்வுக் காலம், கணக்காய்வாளர்களின் தகைமைகள், அதிகாரங்கள், கணக்காய்விற்கான அதிகாரம், முன் கணக்காய்வு, உள்ளகச் செவ்வை, உள்ளகக் கட்டுப்பாடு, ஆழமான கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வு, நியமங்களிற்கான தேவை, கணக்காய்வுச் சான்றுகளின் வகைகள், கணக்காய்வு தொழில்நுட்ப முறைகள் என்பன.

* *கணக்காய்வு முறைமைகளும் நடைமுறையும்.*- பிரதான ஐந்தொகை, உற்பத்தி வியாபார, இலாப நட்டக் கணக்கு விடயங்கள், காணி, கட்டிடங்கள், நிலையான சொத்துக்கள், பதிவேட்டுப் பொருட்கள், நிதிசார் சொத்துக்கள், விற்பனைகள், கொள்வனவுகள், பெறுகைகள், கொடுப்பனவுகள் முதலியவற்றை உள்ளடக்கிய கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களைத் தெரிந்திருத்தல்.

* *கணக்காய்வுச் சிக்கல்கள்.*- அவதானிப்புத் திறைமையைப் பரீட்சிப்பதற்கான இலகுவான சிக்கல்கள், வழுக்களையும், அசாதாரண நிலைமைகளையும் கண்டுபிடிக்கும் புத்திசாதுரியம்.

* கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணிகள்.

(iv) ***வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும்.*** - வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியல் தொடர்பான 2 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (100 புள்ளிகள்)

*கணிதம் :*

* *சமன்பாடுகள்.*- வரைபடத் தீர்வுகள் உட்பட ஒருபடி மற்றும் இருபடிச் சமன்பாடுகள்
* *தொடர்கள்.*- கூட்டல் விருத்தியும் பெருக்கல் விருத்தியும், கழிவிடுதல் உட்பட சாதாரண வட்டியும் கூட்டு வட்டியும்
* வரிசை மாற்ற ஒழுங்கமைவுகளும் சேர்வைகளும் உட்பட அடிப்படை நிகழ்தகவுக் கோட்பாடு, கணித மடக்கையினைப் பயன்படுத்தல்

*புள்ளிவிபரவியல் :*

* தரவுகளின் சேகரிப்பு, சமர்ப்பித்தல் மற்றும் பொருளுரைத்தல்
* அடுக்கு நிகழ்வுப் பகிர்வுகளின் பகுப்பாய்வு சராசரிகளும், மதிப்புச் சிதறலும், நியம வேறுபாடு, அடுக்கு நிகழ்வு வளைகோடுகள்
* நிகழ்தகவு பகிர்வும் அதன் பிரயோகமும்
* மாதிரித் தெரிவும் மாதிரிப் பகிர்வீடுகளின் முக்கியத்துவமான கோட்பாடுகளும், நியம வழு, மாதிரித் தெரிவுமுறைகள், முக்கியத்துவத்தை அறிவதற்கான பரீட்சைகள்
* *காலத்தொடர்கள்.*- காலத் தொடரொன்றின் உறுப்புக்கள், போக்குகள் பருவ, சுழல் வட்ட மற்றும் ஒழுங்கற்ற முறைகள்
* குறிவரைத் தொடர்புகள், புள்ளிவிபரக் குறிவரைவு அட்டவணைகள்

(v) ***சுற்றாடல்.*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக மூன்று மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்) பொருளியல் கோட்பாடுகள், சட்டம் மற்றும் பொது வர்த்தக அறிவு

*பொருளியல் :*

* பொருளியல் கற்கையின் தன்மை, முக்கியத்துவம், விலைப்பொறிமுறை, கேள்வியும் நிரம்பலும், கிரயமும் வருவாயும், இலாபத்தை உச்சப்படுத்தல், உற்பத்திக் காரணிகள், போட்டியும் தனியுரிமையும்

* இலங்கைப் பொருளாதாரத்தின் குணாம்சங்கள், தேசிய வருமானம், மொத்த தேசிய உற்பத்தி, சென்மதி நிலுவை, பணவீக்கம், பொருளாதார மந்தம், நிலையான மற்றும் மிதக்கும் செலாவணி வீதங்கள், மதிப்பிறக்கம் போன்ற பொருளியல் பிரச்சினைகள்

* பணமும் வங்கியியலும். - பணத்தின் தன்மை, பணத்தின் உருவாக்கமும் செயற்பாடுகளும், பணத்தின் பெறுமதி, பொது விலை மட்டம், இலங்கை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், கடன் மற்றும் சேமிப்பு நிறுவனங்களின் பணிகள்

*சட்டம் :*

* இலங்கையில் உள்ள பலவித சட்டமுறைகளின் வரையறை பற்றிய வரலாற்றுச் சுருக்கக் குறிப்பும் அவை தொடர்புறும் விதமும், நீதிமன்றங்கள், தொழில் மன்றங்கள், கைத்தொழில் நீதிமன்றங்கள் ஆகிய வற்றின் கட்டமைப்பும் பணிகளும், இலங்கையில் நீதி பரிபாலனத்தில் ஈடுபட்டுள்ள நீதிபதிகளினதும் பிற முக்கிய சட்ட உத்தியோகத்தர்களினதும் பணிகள்.

* ஒப்பந்த இயல்பு, இயற்கையான மற்றும் சட்ட ரீதியான ஆள் ; முகவராண்மை, பிரதிநிதித்துவம், அதிகாரத் திற்கப்பாற்பட்ட சித்தார்த்தம்

*பொது வர்த்தக அறிவு :*

* முறைமைகள் நடைமுறைகள் உட்பட அலுவலக அமைப்பு கோவைப்படுத்தலும், தொகுத்து அட்ட வணைப்படுத்தலும், அலுவலக சாதனங்கள், கூட்டங்களை ஒழுங்குசெய்தல், கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்கள், அறிக்கைகள் எழுதுதல்

* நிறுவனக் கட்டமைப்பு, அமைப்பு வரைபடம், பதவியணியின் ஒவ்வொரு மட்டத்திற்கிடையிலுமான உறவு, ஒருமுகப்படுத்துதல், பன்முகப்படுத்துதல், தனி வியாபாரம், பங்குடைமை, கூட்டு முயற்சிகள், கம்பனி, கூட்டுறவு அமைப்பு, அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியன உட்பட வணிக அமைப்புக்கள்

* காப்புறுதிக் கோட்பாடுகளும் வகைகளும், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

* கடல், தரை, ஆகாய மார்க்கப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான கப்பற் கேள்வு, தாமதக் கட்டணம்

* கைமாறத்தக்க ஆவணங்கள், கைமாறல் என்பதன் அர்த்தம், காசோலைகள், நாணயமாற்று உண்டியல்கள், புறக் குறிப்புக்கள், குறுக்குக் கோடிடல், ஏற்றுக்கொள்ளல், மதிப்பிழத்தல்

* இலங்கையில் கூட்டுறவு அமைப்புக்களினால் நிறைவேற்றப்படும் பணிகள்

* முதலீட்டு கோட்பாடுகள், இலங்கையில் பங்குப் பரிவர்த்தனை

* விற்பனை ஒப்பந்தம், பொருட்களின் உரித்தினை ஒப்படைத்தல், நிபந்தனைகளும் பற்றாணைகளும், வாடகைக் கொள்வனவு, தவணைக் கட்டண அடிப்படையில் கொள்வனவு அடங்கலான பொருள் விற்பனைகள்

* நடைமுறைகள், ஆவணங்கள், ஏற்றுமதி இறக்குமதி முறைகள், கொடுப்பனவு முறைகளும் நியதிகளும், சுங்க மற்றும் உற்பத்தித் தீர்வைகள் என்பன உட்பட சர்வதேச வர்த்தகம்

* தேசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் பணிகள் உட்பட அபிவிருத்தி நிதி

*மாதிரி விண்ணப்பம்*

சுட்டெண் : [ ]
(அலுவலக பாவனைக்கு மட்டும்)

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

*கணக்காய்வு பரீட்சகர் சேவையில் II ஆம் தரத்திற்கு கணக்காய்வு பரீட்சகர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014*

Open Competitive Examination for Recruitment of Audit Examiners to Grade II of the Audit Examiner's Service - 2014

*(ஏ4 அளவுள்ள 2 கடதாசியில் தலைப்பு இல. 1-4 வரை முதலாம் பக்கத்திலும், 4-6 வரை இரண்டாம் பக்கத்திலும், 7 முதல் 9 வரை மூன்றாம் பக்கத்திலும் மிகுதி நான்காம் பக்கத்திலுமாகத் தயாரிக்கவும்.)*

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரமும் நகர இலக்கமும் :

| நகரம் | நகர இல. |
|---|---|
| | |

கொழும்பு - (Colombo) - 1
யாழ்ப்பாணம் - (Jaffna) - 2

*(நகரத்தினை ஆங்கில பெரிய எழுத்துக்களிலும் நகர இலக்கத்தினையும் பெட்டிக்குள்ளும் இடவும்.)*

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]

(குறித்த இலக்கத்தினை கூட்டிற்குள் இடுக.)

(மொழி மூலத்தை மாற்றுவதற்குப் பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது.)

1. பெயர் :----.

2. முகவரி :----.
(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை ஆகியவற்றிலுள்ள உத்தியோகத்தர்கள் அலுவலக முகவரியை வழங்க வேண்டும்.)

3. 3.1 பால் (பெண்-1, ஆண்-0) : ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக.)

3.2 விவாக நிலை (விவாகமானவர்-2, விவாகமாகாதவர்-1) : ☐
(உரிய இலக்கத்தைக் கட்டத்தில் இடுக.)

3.3 தேசிய அடையாள அட்டைஇல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.4 பிறந்த திகதி :----.

3.5 2014.04.25 ஆந் திகதியில் வயது :----.

4. இனத்தொகுதி :

5. (i) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நீங்கள் பெற்றுள்ள தகைமைகள் :

| பெறப் பட்ட தகைமை | தகைமை பெற்ற திகதி | பாடங்கள் | பெறுபேறுகள் வழங்கப்பட்ட திகதி | தகைமை பெறப் பட்ட நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|
| | |

6. மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :----.

7. தமது நடத்தை மற்றும் இயலுமை பற்றி சான்றுறுதிப்படுத்தக்கூடிய விண்ணப்பதாரியால் பெயரிடப்படும் இரண்டு நபர்களின் பெயர் மற்றும் முகவரி :----.

(i) :----.
(ii) :----.

8. அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவையில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இவற்றைப் பூர்த்தி செய்யவும் :

(i) நீங்கள் சார்ந்திருக்கும் சேவை/திணைக்களம், தரம் :----.
(ii) அச்சேவைக்கு/திணைக்களத் தரத்திற்கு நிரந்தரமாக்கப்பட்ட திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

9. பணப் பற்றுச்சீட்டை கழராதவாறு பெட்டிக்குள் ஒட்டவும் :

☐

(i) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

(ii) பரீட்சைக் கட்டணம் செலுத்திய திகதி :----.

(iii) பரீட்சைக் கட்டணம் செலுத்திய நிலையம் :----.

(iv) செலுத்திய பணத்தொகை (ரூபா) :----.

(பணப்பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருப்பது பின்தொடர் நடவடிக்கைகளுக்கு அவசிய மானதாகும்.)

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய நம்பிக்கைக்கும் அறிவிற்கும் எட்டியவரை உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணத்திற்கான கொடுப்பனவாக .................................... ஆந் திகதியிடப்பட்ட ............................................... இலக்கங்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்துள்ளேன் என்றும் பிரகடனப் படுத்துகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டங்கள், விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவன் எனக் காணுமிடத்து இப்பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் என்னுடைய பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**
(வர்த்தமானி அறிவித்தலின் 8 (ஊ) ஆம் பந்தியைப் பார்க்கவும்.) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................... எனும் பெயருடைய விண்ணப்பதாரியை நான் தனிப்பட்ட ரீதியாக அறிந்தவர் எனவும் அவர், 2014, ........................................... எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
இறப்பர் முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

12. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
(தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளுக்காக)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................ எனும் பெயருடைய விண்ணப்பதாரி ..................................................... ஆந் திகதி முதல் இவ்

அலுவலகத்தில் வேலை செய்கின்றார் என்றும், அவருடைய வேலையும் வருகையும் நடத்தையும் திருப்திகரமாக இருக்கின்றன என்றும் மேலே 1 மற்றும் 8 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் இவ் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் நான் தனிப்பட்ட ரீதியாகப் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும் அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் 2014, ............................................ ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை.

சான்றுபடுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

3-915